# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆனி 27 சனிக்கிழமை (12-07-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:227


நயினாதீவில் நேற்றிரவு சிலமணிநேரம் பதற்றம்

## புலிகளின் வீடியோ படக்காட்சியை கடற்படையினர் தடுத்ததால் முறுகல்!

### 20பேர் தடுத்துவைப்பு! பொதுமக்கள் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம்,ஜூலை12

நயினாதீவில் நேற்றுமுன்னிரவு விடுதலைப் புலிகளின் வீடியோ படக்காட்சி நிகழ்ச்சியை கடற்படையினர் தடுக்க முற்பட்டதால் அங்கு பெரும் முறுகல் நிலை ஏற்பட்டது.

தமிழீழ போராட்ட வரலாற்றுக் காட்சிகளை பார்த்துக்கொண்டிருந்த பொதுமக்கள் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தினர் என்றும் -

வீடியோ மற்றும் தொலைக்காட்சி என்பன கடற்படையினரால் சேதப்படுத்தப்பட்டன என்றும் -

அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலய மஹோற்சவத்தை ஒட்டி நயினாதீவில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கூடியுள்ள சமயத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது.

நயினாதீவு விகாரைக்கு அண்மையில் உள்ள வெளிப்பகுதியில் விடுதலைப் புலிகளின் அரசியல் பணிக குழுவினர் நேற்றிரவு வீடியோப் படக் காட்சியைக் காண்பித்துக் கொண்டிருந்தனர். பெரும் எண்ணிக்கையான

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வெஸ்பேர்க் நேற்று ஒஸ்லோ திரும்பினார்

கொழும்பு,ஜூலை12

சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்கும் முயற்சியில் ஈடுபடுவதற்காக கொழும்பு வந்திருந்த நோர்வே சமாதானக் குழுவின் விசேட ஆலோசகர் ஜோன் வெஸ்பேர்க் நேற்று ஒஸ்லோ திரும்பினார்.

இடைநிறுத்தப்பட்டுள்ள பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கும் முன் முயற்சியாக கொழும்பில் அரச பிரதிநிதிகளுடனும் வன்னியில் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடனும் அவர் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வரைவு இவ்வார இறுதிக்குள் விடுதலைப் புலிகளுக்கு நோர்வே மூலம் அனுப்பப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருந்தார்.

இன்று அல்லது நாளை அந்த வரைவு யோசனையை வெஸ்பேர்க் வன்னிக்கு எடுத்துச்சென்று விடுதலைப் புலிகளிடம் கையளிப்பார் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில், வெஸ்பேர்க் ஒஸ்லோ திரும்பியுள்ளமை, அரசின சமாதான முயற்சிகள் குறித்து பலவிதமான எதிர்மறையான ஊகங்களைக் கிளப்பியிருக்கின்றது. (ஐ-3)

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர்

# ரத்வத்தையும் இரு மகன்களும் பிணையில் செல்வதற்கு அனுமதி

## உயர் நீதிமன்றம் வழங்கியது

கொழும்பு,ஜூலை12

**உடதலவின்ன படுகொலை வழக்கின் முக்கிய எதிரிகளான முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை, அவரது இரண்டு புதல்வர்கள் உட்பட 15 எதிரிகளையும் பிணையில் செல்வதற்கு உயர்நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.**

இப்படுகொலை வழக்கை விசாரணை செய்யும் ட்ரயல் அட் பார் நீதிமன்றம், எதிரிகளுக்கு கடந்த ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி பிணை வழங்க மறுத்து வழங்கிய தீர்ப்பை தள்ளுபடி செய்த உயர்நீதிமன்றம், அவர்களுக்குப் பிணை வழங்க உத்தரவிட்டது.

பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தலைமையிலான ஐந்து நீதியரசர்கள் குழு இந்த எதிரிகளின் பிணை கோரிக்கை மனுவை விசாரணை செய்தது. பி.எதுசூரிய, எஸ்.எச்.யாப்பா, அசோக டி சில்வா, டி.பி.வீரசூரிய ஆகி

(14 ஆம் பக்கம் பார்க்க)

## நயினை நாகபூஷணியின் தேர்த் திருவிழா இன்று

### பக்தர் கூட்டம் அலைமோதுகிறது

யாழ்ப்பாணம்,ஜூலை12

வரலாற்றுப் பெருமைமிகு நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா இன்று முற்பகல் சிறப்பாக நடைபெறவிருக்கிறது.

ஆலயத்தில் இன்று அதிகாலை தொடக்கம் விசேட பூஜைகள் இடம்பெற்று காலை 10.00 மணிக்கு தேர்

(14 ஆம் பக்கம் பார்க்க)

பலாலியில் தரையிறங்கியவேளை

## விபத்துக்குள்ளான 'அன்ரனோவ்' மீளப் பயன்படுத்த முடியாது!

கொழும்பு,ஜூலை12

பலாலி விமான நிலையத்தில் கடந்த மாதம் 14 ஆம் திகதி விபத்துக்குள்ளான 'அன்ரனோவ் - 32' விமானம் மீண்டும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

விமானப் படைக்குச் சொந்தமான இந்த விமானத்தின் உட்பகுதிகள் பெரிதும் சேதமடைந்திருப்பதே இதற்கான காரணம் என்று விமானப் படையினர்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## உயர் பதவிகளுக்கான நியமன முறையில் மாற்றம் வேண்டுமாம்!

### அரசமைப்பு மன்றத்துக்கு ஜனாதிபதி ஆலோசனை

கொழும்பு,ஜூலை12

உயர் பதவிகளுக்கு உத்தியோகத்தர்களைத் தெரிவுசெய்யும் நடைமுறையில் மாற்றங்கள் செய்யும் சாத்தியம் குறித்துப் பரிசீலனை செய்யுமாறு அரசமைப்பு மன்றத்திடம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கேட்டுள்ளார். ஜனாதிபதி செயலகத்தின் ஊடகப் பணிப்பாளர்நாயகம் விடுத்திருக்கும்

(14 ஆம் பக்கம் பார்க்க)

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு பற்றிய

## உத்தேச வரைவு யோசனையை அரசு நாடாளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டும்

### பொ.ஐ.முன்னணி கோரிக்கை

கொழும்பு,ஜூலை12

வடக்கு-கிழக்கிற்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை அமைப்பதற்காக விடுதலைப் புலிகளிடம் அரசு கையளிக்கவுள்ள வரைவு யோசனையை நாடாளுமன்றத்திலும், அமைச்சரவையிலும் சமர்ப்பிக்கவேண்டும் என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணி கேட்டிருக்கிறது.

இது தொடர்பாக ஜனாதிபதி குமாரதுங்க ஏற்கனவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அறிவித்திருக்கிறார் என்று பொ.ஐ.முன்னணியின் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றில் சரத் அமுனுகம இதனைக் கூறினார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

### விண்வெளியில் புதிய கிரகம்

நியூயோர்க்,ஜூலை12

விண்வெளியில் மிகப் பழையதும் மிகப் பெரியதுமான புதிய கிரகம் ஒன்றை தாங்கள் கண்டு பிடித்திருப்பதாக அமெரிக்க மற்றும் கனடா வானியல் நிபுணர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

பால் வீதியில் மிகத் தொலைவில் காணப்படும் இந்தக்கிரகம் வியாழன் கிரகத்தை விடப் பெரியது என்று கூறப்படுகிறது.

இந்தக்கிரகம், சுமார் ஆயிரத்து 300 கோடி ஆண்டுகளுக்கு முன்பு உருவானது. அதாவது, இதற்கு வயது சூரியனை விட இரண்டு மடங்கு அதிகம். சூரிய மண்டலத்தில் மிகப் பெரிய கிரகமான வியாழனை விட இந்தக்கிரகம் இரண்டு மடங்கு பெரியது என்கிறார்கள் வானியல் நிபுணர்கள். (ஐ-9)

### உயர் பாதுகாப்பு வலயம் குறித்த கலந்துரையாடல்

மன்னார் மாவட்டத்தின் மீள்குடியேற்றம் மற்றும் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடல் ஒன்று நேற்று மன்னாரில் நடைபெற்றுள்ளது.

மன்னார் 'வாழ்வோதயம்' நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குணாளன், மன்னார்

(14 ஆம் பக்கம் பார்க்க)

கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்ட

## புலிகளின் ஆதரவாளர் கிழக்கில் சுட்டுக் கொலை!

மட்டக்களப்பு,ஜூலை12

ராசிக்குழு உறுப்பினர் ஒருவரின் கொலை தொடர்பாக புலிகளின் புதூர் அரசியல் துறைப்பொறுப்பாளர் சத்தியராஜுடன் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த புலிகளின் ஆதரவாளர் ஒருவர் நேற்று இனந் தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்று நண்பகல் 1.15 மணியளவில் மட்டக்களப்பு பேற்றுக் குடாவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில், மட்டக்களப்பு திமிலத்தீவைச் சேர்ந்த

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுத் தலைவர் கிளிநொச்சி வருவது தாமதம்

கிளிநொச்சி,ஜூலை12

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ட்ரைவ் டெலிவ்சன் நேற்றுக் கிளிநொச்சிக்கு மேற்கொள்ளவிருந்த விஜயம எதிர்வரும் திங்கட்கிழமைக்கு பிற்போடப்பட்டிருக்கிறது.

திருகோணமலை குரங்குபாஞ்சான் பகுதியில் விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்டுள்ள பயிற்சி முகாம் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைக்குச் சுமுக தீர்வு காணும் நோக்குடன விடுதலைப் புலிகளின் அரசியல

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஐக்கிய தேசிய முன்னணியிலிருந்து விலகமாட்டாராம் திஸநாயக்கா

கொழும்பு,ஜூலை12

ஐக்கிய தேசிய முன்னணியில் இருந்து விலகும் நோக்கம் தமக்குக் கிடையாது என்று அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கா தெரிவித்திருக்கிறார். எனினும் தமது அமைச்சுக்கு நிதியைப் பெறுவதில் சிறிதுகாலமாக நிதி அமைச்சுடன் தான் பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

கன்னறுவயில் மரபணு நிலையத்

(14 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்





நேற்று யாழ்.வருகைதந்த பதிவாளர் நாயகம் எல்.கே.ரத்னஶ்ரீ மற்றும் அவரது குழுவினர் செயலகத்தில் இயங்கும் பதிவாளர் அலுவலகத்தில் மேலதிக மாவட்ட பதிவாளர் நாயகம் என்.சதாசிவ ஐயரை சந்தித்துக் கலந்துரையாடுவதை முதலாவது படத்திலும், பருத்தித்துறை பதிவாளர் அலுவலகத்துக்கு போட்டோ பிரதி செய்யும் இயந்திரம் ஒன்றை பதிவாளரிடம் சம்பிரதாய பூர்வமாக கையளிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## அரியாலையில் சனசமூகநிலைய ஆண்டுவிழா

அரியாலை,ஜூலை12

அரியாலை சனசமூக நிலையத்தின் 54 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று சனிக்கிழமை நடைபெறுகிறது.

பகல் நிகழ்வுகளாகப் பிற்பகல் 2.30 மணிக்கு மெய்வன்மைப் போட்டிகள் நிலைய மைதானத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் ம.விஜயகுமார் தம்பதியினர் முதன்மைவிருந்தினராகக் கலந்துகொள்வர்.

மாலை நிகழ்வுகள் சனசமூக நிலைய காசிப்பிள்ளை அரங்கில் இரவு 7.30 மணிக்கு ஆரம்பமாகும். தி.செல்வரட்ணம் தம்பதியர் முதன்மை விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

(ஐ-17)

# பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தை குடாநாட்டில் திறக்க ஏற்பாடு செய்க!

### யாழ். வந்த குழுவிடம் அரச அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை12

யாழ்.குடாநாட்டு மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் வடமாகாண உதவிப்பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தை இங்கு திறப்பதற்கு ஆவண செய்யவேண்டும்.

- இவ்வாறு நேற்று யாழ்.வருகைதந்த பதிவாளர் நாயகத்திடம் யாழ். அரச அதிபர் வேண்டுகோள் விடுத்தார்.

பதிவாளர் நாயகம் எல்.கே.ரதனஶ்ரீ, பதிவாளர் நாயகத் திணைக்கள பிரதம புள்ளிவிவரவியலாளர் சுசந்தா ரணதீர மற்றும் 'யுனிசெவ்' அமைப்பின் பிரதிநிதி நிஸார் ஆகியோர் அடங்கிய குழு தரைவழியாக நேற்று யாழ் வந்தது.

இக்குழுவினர் நேற்றுக்காலை யாழ்.செயலகத்தில் அரச அதிபர் எஸ்.பத்மநாதனைச் சந்தித்துக் கலந்துரையாடினர். யாழ்.குடாநாட்டில் பொதுமக்கள் பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பான நடைமுறைகள் பற்றி இதில் கலந்துரையாடப்பட்டது. யாழ்.மாவட்டத்தில் உள்ள மக்களின் பிறப்பு, இறப்பு மற்றும் ஏனைய பதிவுகள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு வடமாகாண உதவிப் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தை வெகுவிரைவில் இங்கு திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென அரச அதிபர் பதிவாளர் நாயகத்திடம் வேண்டுகோள் விடுத்தார்.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தாம் மேற்கொள்வதாக பதிவாளர் நாயகம் அங்கு தெரிவித்தார்.

இதன் பின்னர் இக்குழுவினர் யாழ். செயலகத்தில் உள்ள பதிவாளர் அலுவலகத்தைப் பார்வையிட்டனர். பின்னர் பருத்தித்துறை பதிவாளர் அலுவலகத்திற்கும் இக்குழுவினர் விஜயம் செய்தனர்.

வடக்கு-கிழக்கில் உள்ள எல்லோருக்கும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை வழங்கும் திட்டம் ஒன்றை 'யுனிசெவ்' அமைப்பு நடைமுறைப்படுத்தி வருவதற்கமைய, 'யுனிசெவ்' நிறுவன நிதியுதவியுடன் மேற்படி அலுவலகத்திற்கு 'போட்டோ பிரதி' இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டது. பதிவாளர் நாயகம் எல்.கேரத்னஶ்ரீ இவ்வியந்திரத்தை பருத்தித்துறை மேலதிக மாவட்டப் பதிவாளர் சரஸ்வதி தியாகராஜாவிடம் வழங்கினார். இவ்வைபவத்தில் யாழ்.மாவட்ட மேலதிக உதவிப் பதிவாளர் நாயகம் என்.சதாசிவஐயர், யாழ்.மாவட்டப் பதிவாளர் எஸ்.ஈஸ்வரதாஸன் ஆகியோரும் கலந்துகொண்டனர். இதன் பின்னர் பதிவாளர் நாயகம் தலைமையிலான குழு தரைவழியூடாக கொழும்பு திரும்பியது.

முன்னதாக - நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் உதவிப்பதிவாளர் நாயகங்களையும் இக்குழுவினர் சந்தித்துக்கலந்துரையாடினர். இம்மாவட்டங்களில் உள்ள பதிவாளர் அலுவலகங்களுக்கும் 'யுனிசெவ்' அமைப்பின் உதவியுடன் போட்டோ பிரதி இயந்திரங்களும் மின்பிறப்பாக்கிகளும் வழங்கப்பட்டன.

(எ-8)

# அமைச்சர் கரு அரசிலிருந்து வெளியேறி பொ.ஐ.முவில் இணையப் போகிறாராம்!

### அரசியல் வட்டார வதந்திகளை அவரே மறுக்கிறார்

கொழும்பு,ஜூலை12

எரிபொருள், மின்சக்தி அமைச்சர் கரு ஜயசூரிய குறித்து நேற்றுமுன்தினம் பரவிய வதந்தி ஒன்றில் உண்மையில்லையென அவரே மறுத்திருக்கிறார். அரசில் இருந்து வெளியேறி தேசிய அரசு ஒன்று அமைப்பதற்காக அவர் பொ.ஐ.முன்னணியுடன் இணையப்போகிறார் என்பதே அந்த வதந்தி.

கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரவிய இந்த வதந்தியை மறுத்திருக்கும் கருஜயசூரிய, அரசில் இருந்தோ அல்லது ஐ.தே.கட்சியிலிருந்தோ விலகும் எண்ணம் தமக்கு இல்லை என கூறியிருக்கிறார். நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐதேக நாடாளுமன்றக் குழுக்கூட்டத்திலும் இவ்விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

கட்சியின் உபதலைவர் கருஜயசூரிய குறித்து வதந்திகள் பரவுகின்றன. அந்த வதந்திகள் குறித்து கவனமாக இருக்கவேண்டும என்று அக்கூட்டத்தில் பிரதமர் கூறியிருக்கிறார்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட அமைச்சர் கருஜயசூரிய பரவியிருக்கும் வதந்தி முற்றாக உண்மையற்றதாகும் என்று குறிப் பிட்டிருக்கிறார்.

(எ)

# வவுனியா 'இண்டர்சிட்டி' ரயில் சேவை: நிறுத்தும் முடிவுக்குப் பிரதமர் தடை!

கொழும்பு,ஜூலை12

கொழும்பு - வவுனியா 'இன்டர்சிட்டி' ரயில் சேவையை எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் நிறுத்தும் தீர்மானம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பின் பேரில் இடைநிறுத்தப்பட்டிருக்கிறது.

ரயில் சேவையை நிறுத்த ரயில்வே திணைக்களம் மேற்கொண்ட தீர்மானத்தை இடைநிறுத்தும்படி பிரதமரின் அலுவலகம் கடந்த புதன்று ரயில்வே திணைக்கள பொது முகாமையாளர் பிரியால் டி சில்வாவிடம் அறிவித்திருக்கிறது.

இச்சேவையால் நஷ்டம் ஏற்படுகிறது என்ற காரணத்தின் அடிப்படையிலேயே அதனை நிறுத்தத் தீர்மானிக்கப்பட்டதாக ரயில்வே திணைக்களம் அறிவித்திருக்கிறது.

ஆயினும், ரயில் கட்டணங்கள் அதிகரிப்பும், உரிய நேரத்துக்கு சேவை மேற்கொள்ளப்படாததுமே பயணிகளின் எண்ணிக்கை குறைந்ததுக்கான காரணங்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

(எ)

# அமைச்சர் எஸ்.பி. - திறைசேரி செயலாளர் மோதலுக்குப் பிரதமர் முற்றுப்புள்ளி

### நிதி ஒதுக்கும் பொறுப்பு பாஸ்கரலிங்கத்திடம்

கொழும்பு,ஜூலை12

விவசாயக் கால்நடைகள், சமுர்த்தியமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்காவுக்கும் திறைசேரியின் உயர் அதிகாரி ஒருவருக்கும் இடையிலான மோதலுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீர்வு கண்டிருக்கிறார். அமைச்சர் திஸாநாயக்காவின் அமைச்சுக்களுக்கு நிதி ஒதுக்கும் பொறுப்பை நிதியமைச்சின் ஆலோசகரான ஆர்.பாஸ்கரலிங்கத்திடமும் திறைசேரி உயர் அதிகாரிகளில் ஒருவரான எஸ்.தியாரத்னவிடமும் ஒப்படைத்திருப்பதன் மூலமே இந்த மோதலுக்கு பிரதமர் முடிவுகண்டார்.

தனது அமைச்சுக்கு நிதி ஒதுக்குவதில் திறைசேரியின் அந்த உயர் அதிகாரியினால் வீண் காலதாமதங்கள் ஏற்படுத்தப்படுவதாக குற்றஞ்சாட்டிய அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தனது ராஜினாமாக் கடிதத்தை நேற்றுமுன்தினம் காலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்திருந்தார்.

அமைச்சரின் ராஜினாமாக் கடிதத்தை ஏற்றுக்கொள்ளாத பிரதமர், அவரது அமைச்சுக்கு நிதி ஒதுக்கும் பொறுப்பை ஆர்.பாஸ்கரலிங்கத்திடமும், எஸ்.தியாரத்னவிடமும் ஒப்படைப்பதாக அவரிடம் அறிவித்திருக்கிறார். இதையடுத்து அமைச்சர் திஸாநாயக்க தனது ராஜினாமாக் கடிதத்தை வாபஸ் பெற்றுக் கொண்டார்.

இது குறித்து அமைச்சின் ஊடகப்பேச்சாளரான கே.மங்கள ஜானக கருத்து வெளியிடுகையில், அமைச்சர் திஸாநாயக்காவின் அமைச்சுக்களுக்கு நிதி ஒதுக்கும் திறைசேரியின் பொறுப்புக்களில் மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதை உறுதிப்படுத்தினார்.

(எ)

## குருகுலத்தில் உபாகர்மம்

யாழ்ப்பாணம்,ஜூலை12

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிமுதல் ஆனைப்பந்தியில் உள்ள வேத சிவாகம குருகுலத்தில் உபாகர்மம் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

அந்தணப்பெருமக்கள் தத்தமது பஞ்சபாத்திரங்களுடன் வருகைதந்து நிகழ்வில் கலந்துகொண்டு தமது கிரியைகளைப் பூர்த்திசெய்யுமாறு ஒன்றியம் கேட்டுள்ளது.

நியந்த்ரீயின் ஏற்பாட்டில் உபாகர்மம் நிகழ்வு நல்லூர் சிவன்கோயிலில நாளை இடம்பெறும்.

(எ-3)

## முன்பள்ளி விளையாட்டுவிழா

தென்மராட்சி,ஜூலை12

யாழ்.வை.எம்.சீ.ஏ. நிறுவனத்தினால நடத்தப்படும் சிறுவர் பாடசாலை சிறார்களின் விளையாட்டுப் போட்டி இன்று யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நிறுவன சிறுவர் பாடசாலைகளின் அமைப்பாளர் எஸ்.பி.ஜீவானந்தம் தலைமையில் நடைபெறும்.

# மனைவி, மகள் மீது பொலீஸ்காரர் துப்பாக்கிப் பிரயோகம்; மனைவி பலி!

### பேராதனையில் சம்பவம்; கணவர் தலைமறைவு

கண்டி,ஜூலை12

பேராதனை பொலீஸ் பிரிவைச் சேர்ந்த ஈரியகம என்னும் இடத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் தாயும் மகளும் படுகாயங்களுக்கு உள்ளாகினர். பின்னர் தாய் மரணமானார்.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில் ஹேறதெனிய வித்தியாலய ஆசிரியையான திருமதி முதுன்கொத்(வயது35) வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மரணமானார். அவரது புதல்வியான பெ.செரனி(வயது11) அபாயகரமான நிலையில் பேராதனை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

துப்பாக்கிச்சூட்டை நடத்தினார் எனக்கருதப்படும் அப்பெண்ணின் கணவரான உப்புவெளி பொலீஸ் நிலைய கான்ஸ்டபிள் தலைமறைவாகிவிட்டார் என்று பேராதனை பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

பொலீஸ் கான்ஸ்டபிள் லீவுக்காக வீட்டுக்கு வந்திருந்த சந்தர்ப்பத்திலேயே இந்தச்சம்பவம் இடம்பெற்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(எ)

### இந்து கலாசார திணைக்களத்தின் ஏற்பாட்டில்

# கரம்பொன்னில் திங்கள் முதல் அறநெறி ஆசிரியர் செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜூலை12

தீவுப்பகுதி இந்து அறநெறிப்பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான வருடாந்த செயலமர்வு நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு கரம்பொன் சண்முகநாதன் மகாவித்தியாலயத்தில் ஆரம்பமாகி இருதினங்கள் நடைபெறவுள்ளது.

ஊர்காவற்றுறை,காரைநகர், நெடுந்தீவு ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச்சேர்ந்த அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்கள், அதிபர்கள் இந்த செயலமர்வில் கலந்து கொள்வர்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்தச்செயலமர்வு தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் நடைபெறும்.

செயலமர்வின் ஆரம்பநாள் நிகழ்வில் முன்னாள் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபரும் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளருமான திருமதி சாந்தி நாவுக்கரசன், இந்துகலாசார அமைச்சின் மேலதிக செயலாளர் க.பரமலிங்கம், அமைச்சின் சிரேஷ்ட உதவிச செயலாளரும் முன்னாள் மேலதிக அரச அதிபருமான து.வைத்திலிங்கம், உதவிப்பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம், காரைநகர் உதவி அரச அதிபர் வே.சாம்பசிவம், நெடுந்தீவு உதவி அரச அதிபர் எஸ்.பேரானந்தன் ஆகியோர் கலந்துகொள்வர்.

செயலமர்வுக்கு அழைக்கப்பட்ட சகல அறநெறிப்பாடசாலைகளின் ஆசிரியர்களையும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் கேட்டுள்ளார்.

(எ)

# வெள்ள அபாயம் நீங்கியது

பலாங்கொடை,ஜூலை12

நேற்றுமுன்தினம் பெய்த பெருமழையினால் இரத்தினபுரி, காலிப் பிரதேசங்களில் ஏற்பட்ட சிறு வெள்ள அபாயம் நேற்று நீங்கத் தொடங்கியது.

இந்த மழையினால் களுகங்கை உட்பட பல சிறு ஆறுகளில் தண்ணீர் மட்டம் உயர்ந்ததோடு இரத்தினபுரி பகுதியில் பல வீதிகள் சிலு வெள்ளத்தில் மூழ்கின.

எவ்வாறாயினும், நேற்றுமுன்தினம் மாலை 6 மணிமுதல் மழை ஓய்ந்துவிட்டது. நேற்றும்சீரான கால நிலையே நிலவியதாகத் தெரிவிக்கப்பட்டது.

முன்னைய அனுபவத்தைக் கொண்டு சில குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்ததைக் காணமுடிந்தது. பெரும்பாலான குடும்பங்கள் தமது மூடை முடிச்சுக்களை கட்டத்தயாராக இருந்தன. *(மற்றொரு செய்தி 9 ஆம் பக்கத்தில்)*

### ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில்

# 6கூட்டுறவுச் சங்கங்களுக்கு சுழற்சிமுறைக்கடன் உதவி

யாழ்ப்பாணம்,ஜூலை12

யாழ்.குடாநாட்டில் உள்ள மேலும் 6 ப.நோ.கூ.சங்கங்களுக்கு ஐ.நா.அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சுழற்சி முறைக்கடன் வழங்கப்படவுள்ளதாக யாழ்மாவட்ட கூட்டுறவுத் திணைக்கள உதவி ஆணையாளர் எஸ்.கனகசபாபதி தெரிவித்துள்ளார்.

குடாநாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடந்த பல வருடங்களாகவே இந்த சுழற்சிமுறைக்கடன் வழங்கப்பட்டு வருகிறது. இதன்படி இதுவரையும் 17கூட்டுறவுச் சங்கங்களுக்கு அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் கிராம மட்டத்திலான தொழில்முயற்சி ஆகியவற்றுக்கென இக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

தற்பொழுது இக்கடனைப் பெறுவதற்கு சாவகச்சேரி, கொடிகாமம், மருதங்கேணி, பருத்தித்துறை, புலோலி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளுக்கான கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இச்சங்கங்களுக்கான கடன்தொகை ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி வழங்கப்படவுள்ளது.

அத்துடன் தலா ஒவ்வொரு கணனியும் வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஒ-10-12)

# கராச்சி குண்டு வெடிப்பில் குறைந்தது இருவர் பலி!

இஸ்லாமாபாத்,ஜூலை12


பாகிஸ்தானின் வர்த்தகத் தலைநகரான கராச்சியில் நேற்று இடம்பெற்ற குண்டுவெடிப்பில் குறைந்தது இருவர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் காயமடைந்தனர்.

நகரின் மத்திய பகுதியில் உள்ள குரோன் பிளாஸா என்ற கட்டடத்தின் முன்பாக இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றது.

கட்டடத்தின் நுழைவாயிலில் உள்ள தூண் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த 'றிமோட் கொன்ட்ரோல்' மூலம் இயங்கும் குண்டே வெடித்ததாக பொலீஸார் தெரிவித்தனர். இந்தக் குண்டின் நிறை சுமார் 2 கிலோகிராம் அளவு இருந்ததாகக் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவத்துக்கும் தீவிரவாதக் குழுக்களுக்கும் இடையில் தொடர்புகள் இருக்கும் என்று தாம் நம்பவில்லை என்று பொலீஸார் கூறுகின்றனர்.

முஸ்லிம்களின் புனித நாளான வெள்ளிக்கிழமையில் நடைபெற்ற இந்தக் குண்டுவெடிப்பில் அந்தக் கட்டடத்தின் கண்ணாடிகள் நொறுங்கி வீழ்ந்தன. (ம)



இந்தியத் தலைநகர் புதுடில்லிக்கும் பாகிஸ்தானின் லாகூர் நகரத்துக்கும் இடையிலான பயணிகள் பஸ போக்குவரத்து நேற்று மீண்டும் ஆரம்பமாகியது. பாகிஸ்தானில் இருந்து மருத்துவ சிகிச்சைக்காக இந்தியா வந்திருந்த 2 வயதுச் சிறுமி ஒருத்தியும் நேற்று தாயகம் திரும்பினாள். புதுடில்லியில் இருந்து புறப்பட்ட பஸ்ஸில் 32 பேர் பயணம் செய்தனர். லாகூரில் இருந்து புதுடில்லி வந்த பஸ்ஸில் 30 பேர் பயணம் செய்தனர். அவர்களில் பலர் பத்திரிகையாளர்கள்.

# இரட்டைச் சகோதரிகளின் உடல்கள் அரச மரியாதைகளுடன் அடக்கம்

தெஹ்ரான்,ஜூலை12

ஈரானிய இரட்டைச் சகோதரிகளின் உடல்கள் நேற்று ஆயிரக்கணக்கானோர் சூழ்ந்து கண்ணீமல்கி நிற்க, அரச மரியாதைகளுடன் அவர்களது சொந்த ஊரில் அடக்கம் செய்யப்பட்டன.

சிங்கப்பூரில் உள்ள பால்வி மருத்துவமனையில் தனித்தனியாக வைக்கப்பட்டிருந்த அவர்களது உடல்கள், நேற்று முன்தினம் விமானத்தில் தெஹ்ரானுக்கு எடுத்துச்செல்லப்பட்டன.

ஈரான் தலைநகர் தெஹ்ரான் விமான நிலையத்தில் இரட்டையர்களின் உடல்களைப் பொறுப்பேற்பதற்காக ஆயிரக்கணக்கானோர் கூடியிருந்தனர்.

பின்னர் உடல்கள் அவர்களின் சொந்த ஊரான பிரோசாபாத் கிராமத்துக்கு அம்புலன்ஸில் கொண்டு செல்லப்பட்டன. அம்புலன்ஸிற்கு முன்னாலும் பின்னாலும் சோககீதங்களை இசைத்தபடி வாகனங்கள் சென்றன. அங்குள்ள அடக்க ஸ்தலத்தில் அஞ்சலிக்காகவைக்கப்பட்டன.

இறுதியில் ஆயிரக்கணக்கானவர்களின் கண்ணீர்த்துளிகளுடன் அவர்களின் உடல்கள் சகல அரச மரியாதைகளுடன் அடக்கம் செய்யப்பட்டன.

இரட்டைச் சகோதரிகளின் மரணம் தொடர்பாக சிங்கப்பூர் பிரதமர் அனுப்பிவைத்த இரங்கல் செய்தியில், லாடன் லலே இரட்டையர் சிங்கப்பூர் மக்களின் இதயங்களைக் கவர்ந்துவிட்டனர். ஸாம்பியா, கிரேக்கம் ஆகிய நாடுகளின் தலைவர்களும் இரட்டையர் மறைவுக்கு இரங்கல் தெரிவித்திருந்தனர். அரசியல்வாதிகள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

இரட்டையர்களின் மறைவை யொட்டி நேற்று ஈரானில் தேசிய துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

# ஈரான் சகோதரிகள் பெயரில் அறக்கட்டளை அமைப்பு

சிங்கப்பூர்சிற்றி,ஜூலை12

தலையொட்டிப் பிறந்த, ஈரானிய இரட்டையர்களின் பெயரில் அறக்கட்டளையகம் ஒன்று ஆரம்பிக்கபட உள்ளது.

லேடன், லாலே ஆகிய இந்த இரு சகோதரிகளையும் பிரிக்கும் சத்திரசிகிச்சை சிங்கப்பூர் மருத்துவமனையில் இடம்பெற்றபோது அவர்கள் இருவரும் மரணமடைந்தனர். இதனால் ஈரானில் பெரும் சோகம் ஏற்பட்டது. உலகெங்கிலும் பெரும் அனுதாபம் ஏற்பட்டது.

இந்த நிலையில் சகோதரிகளுக்கு சத்திரசிகிச்சையை மேற்கொண்ட சிங்கப்பூர் மருத்துவமனை சகோதரிகளின் பெயரில் அறக்கட்டளையகம் ஒன்றை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளது.

சகோதரிகளின் சத்திரசிகிச்சைக்காக ஈரான் அரசு வழங்கிய சுமார் ஒரு கோடி இந்திய ரூபாயை இந்த அறக்கட்டளையகத்தில் சேர்க்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அது தவிர மேலும் நிதியும் திரட்டப்படவுள்ளது.

இந்த அறக்கட்டளையகம் மூலம் வருங்காலத்தில் சகோதரிகள் போல் மோசமான நோய்களால் பாதிக்கப்படுவர்களுக்கு சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளது. (ம)

# அடுத்த ஜனவரியில் சார்க் மாநாடு வாஜ்பாய் பாகிஸ்தான் செல்வார்

புதுடில்லி,ஜூலை12

நீண்ட காலமாகக் கூட்டப்படாமல் இருக்கும் சார்க் மாநாட்டை அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஜனவரி 6ஆம் திகதி முதல் 3 நாள்கள் இந்த மாநாடு நடைபெறும். இதில் கலந்துகொள்வதற்கு இந்தியா சம்மதம் தெரிவித்துள்ளது.

இம்முறை பாகிஸ்தானிலேயே இந்த மாநாடு இடம்பெற உள்ளது.

இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இந்தியப் பிரதமர் வாஜ்பாய் பாகிஸ்தானுக்குச் செல்ல உள்ளார். இதனை வெளியுறவுத் துறைச் செயலாளர் கன்வல்சிபல் தெரிவித்தார்.

பாகிஸ்தான் செல்லும் வாஜ்பாய் அங்கு எத்தனை நாள்கள் தங்கியிருப்பார் என்பது பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

கடைசி சார்க் மாநாடு 2002ஆம் ஆண்டு நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் இடம்பெற்றது. அடுத்த மாநாட்டை பாகிஸ்தான் நடத்துவதற்கு முன்வந்தது. ஆனால், அக்காலப் பகுதியில் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையில் கடும் பதற்றம் நிலவி வந்ததனால் மாநாட்டில் கலந்துகொள்வதுதொடர்பாக இந்தியா இழுத்தடித்து வந்தது.

சார்க் அமைப்பின் சட்டப்படி அதில் அங்கம் வகிக்கும் நாடுகளில் ஒரு நாடு கலந்துகொள்ளாவிட்டால் கூட மாநாடு நடத்தப்படக் கூடாது. இதனால் பாகிஸ்தான் மாநாடு நடத்தப்படாமல் இழுபட்டது.

இப்போது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் ஒரு சுமுக நிலை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றன. இதனால், சார்க் மாநாட்டை நடத்துவதற்கு பாகிஸ்தான் திட்டமிட்டது. இந்தியாவும் அதனை ஏற்றுக்கொண்டுள்ளது.

மாநாட்டுக்காக பாகிஸ்தான் செல்லும் இந்தியப் பிரதமர் மரியாதை நிமித்தம் பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப்பைச் சந்தித்து உரையாற்றுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த சில வருடங்களாக முஷாரப்பை நேரில் சந்திப்பதை வாஜ்பாய் தவிர்த்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், மாலைதீவுகள் ஆகியன இணைந்து 1985ஆம் ஆண்டு தெற்காசிய ஒத்துழைப்பு மன்றமான சார்க்கை ஆரம்பித்தன. (ம)

# டில்லி-லாகூர் பஸ் சேவை நேற்று மீண்டும் ஆரம்பம்!

புதுடில்லி,ஜூலை12

இந்தியா - பாகிஸ்தான் இடையேயான பஸ் போக்குவரத்து நேற்று மீண்டும் ஆரம்பமானது. கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக இடை நிறுத்தப்பட்டிருந்த இந்த பஸ் போக்குவரத்தை புதுடில்லியில் இந்திய தரைவழிப் போக்குவரத்து அமைச்சர் பி.சி.கந்தூரி, கொடி அசைத்து ஆரம்பித்து வைத்தார்.

இரு நாடுகள் இடையிலான உறவுகளை மேம்படுத்தும் திட்டங்களின் ஒரு பகுதியாவே இந்த பஸ் போக்குவரத்து நடத்தப்பட்டுள்ளது.

இந்த பஸ் போக்குவரத்து 1999 ஆம் அண்டு முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது இந்தியப் பிரதமர் வாஜ்பாய் இந்த பஸ்ஸில் லாகூருக்குப் பயணமானார்.

2001 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நாடாளுமன்றம் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலின் பின்னர் இரு நாடுகள் இடையிலான உறவுகளில் கடும் விரிசல் ஏற்பட்டது. இதனால், இந்த பஸ் சேவை நிறுத்தப்பட்டது.

மீண்டும் அது புதுடெல்லியில் இருந்தும் ஆரம்பிக்கப்பட்டது.

புதுடில்லியில் பஸ் போக்குவரத்தை ஆரம்பித்து வைத்து பேசிய அமைச்சர் பி.சி. கந்தூரி, மீண்டும் பஸ் போக்குவரத்தை ஆரம்பித்திருப்பதன் மூலம் இந்தியா அமைதி முயற்சியை எடுத்துள்ளது. பாகிஸ்தான் இதில் இருந்து பாடம் கற்றுக்கொண்டு எல்லை தாண்டும் தீவிரவாதத்தை நிறுத்த வேண்டும்என்றார். (ம)

# ஈராக் போருக்கான காரணத்தை அமெரிக்கா திரித்துக் கூறியது!

வாஷிங்ரன்,ஜூலை12

"உளவுத் துறையினர் தெரிவித்த தகவல்களை மக்களுக்கு அப்படியே தெரிவிக்காமல் அதனைத் திரித்துக் கூறி பொய் மூட்டைகளை அவிழ்த்து விட்டு ஈராக் மீது ஜனாதிபதி புஷ் நிர்வாகம் போரை நடத்தியுள்ளது. உண்மையில் போர் நடத்தும் அளவிற்கு ஈராக்கினால் அமெரிக்காவிற்கு அச்சுறுத்தல் இல்லை."

- இவ்வாறு அண்மையில் ஓய்வு பெற்ற அமெரிக்க வெளியுறவு அமைச்சக உளவு நிறுவன அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சகத்தில் உளவுத்துறை மற்றும் ஆராய்ச்சிப் பிரிவில் இயக்குநராகப் பணியாற்றிய அதிகாரி ஒருவர் கடந்த செப்ரெம்பர் மாதம் பதவியில் இருந்து ஓய்வு பெற்றார். அவர் ஈராக் போர் பற்றி தெரிவித்ததாவது:-

ஈராக் இராணுவத்தின் அச்சுறுத்தல் தொடர்பாக அமெரிக்க மக்களுக்கு ஜனாதிபதி புஷ் நிர்வாகம் தெளிவான தகவல்களைத் தரவில்லை. அமெரிக்க நிர்வாகம் அறிவித்த அளவிற்கு ஈராக் படையினரால் அச்சுறுத்தல் இல்லை. உளவுத்துறையினர் தெரிவித்த தகவல்களில் சில தவறுகள் இருக்கலாம். ஆனால், அவர்கள் தெரிவித்த தகவல்களை எல்லாம் உயர் அதிகாரிகள் மறைத்துவிட்டு தவறான தகவல்களைத் தெரிவித்தனர். நிறையப் பொய்களை அவிழ்த்துவிட்டனர். இதனால்தான் ஈராக் பேரழிவு ஆயுதங்களை வைத்திருப்பதாகக் கூறி போர் தொடுப்பதை ஜனாதிபதி புஷ் நியாயப்படுத்தினார்.

ஈராக் வெளிநாடுகளில் இருந்து வாங்கியதாகக் கூறப்படும் அலுமினியக் குழாய்களை அமெரிக்க அதிகாரிகள் அணுகுண்டு தயாரிக்கப் பயன்படும் செறிவூட்டப்பட்ட யுரேனியம் எனத் திரித்துக் கூறினர். அதுவே போருக்குக் காரணமாக அமைந்துவிட்டது. அமெரிக்காவின் மத்திய புலனாய்வு நிறுவனத்தின் (சி.ஐ.ஏ) தலைவர் ஜோர்ஜ் டெனட்கூட நாடாளுமன்றத்தில் சில தவறான தகவல்களைத் தெரிவித்துவிட்டார். (ம)



ஈராக்கில் பொலிஸார் ஒருவர் சிவில் உடையில் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார். அங்கு நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படையினர் மீது நாளாந்தம் பத்து முதல் 25 வரையான தாக்குதல்கள் நடத்தப்படுவதாக அமெரிக்க இராணுவத் தளபதி ஜெனரல் ரொமி பிராங் தெரிவித்துள்ளார்.

# மக்களை ஏமாற்றவில்லை என்கிறார் பவல்

வாஷிங்ரன்,ஜூலை12

ஈராக் போருக்காக அமெரிக்க அரசு தவறான தகவல்களை வழங்கவில்லை. அமெரிக்கர்கள் தவறாக வழிநடத்தப்பட்டனர் அல்லது ஏமாற்றப்பட்டனர் என்று கூறுவது பொய் என அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொலின் பவல் கூறியுள்ளார்.

ஜனவரி 28ஆம் திகதி மாநிலங்களவையில் பேசிய ஜனாதிபதி புஷ், ஆபிரிக்க நாடொன்றிலிருந்து யுரேனியத்தை ஈராக் கொள்வனவு செய்ததாகத் தெரிவித்திருந்தார். பின்னர் அது ஆதாரமற்ற தகவல் என்று தெரிய வந்ததால் தற்போது சர்ச்சைகள் தோன்றியுள்ளன.

புஷ் உரையாற்றியதன் பின் எட்டு நாள்கள் கழித்து ஐ.நாவில் ஈராக் தொடர்பான தனது நிலைப்பாட்டை விளக்கிய பவல், யுரேனியம் பற்றிய கதையைக் கூறவில்லை. ஆனால், புஷ் பொருத்தமான வகையில் உரையாற்றினார் என்றே தெரிவித்திருந்தார்.

தற்போது இந்தச் சர்சை சூடுபிடித்துள்ளது. அமெரிக்க மக்களை ஏமாற்றவோ, தவறாக வழிநடத்தவோ ஜனாதிபதி அவ்வாறு கூறவில்லை என்று கொலின் பவல் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவில் வைத்து ஜனாதிபதி புஷ்ஷுடன் இணைந்து செய்தியாளர்களிடம் பேசும் போதே அவர் இதனைத் தெரிவிக்கின்றார்.

இதற்கிடையே -

மாநிலங்கள் மாநாட்டில் பேசிய போது யுரேனியக் கதையைக் கூறியது பற்றி வருத்தப்படவில்லையா என நிருபர் ஒருவர் கேள்வி எழுப்பிய போது, ஈராக் வசம் பேரழிவு ஆயுதங்கள் இருந்தன என்பதில் தனக்கு தற்போதும் நம்பிக்கை இருக்கிறது என்று புஷ் தெரிவித்தார்.

குறித்த புலனாய்வுத் தகவல் பற்றியே மீண்டும் மீண்டும் கேள்விகளைக் கேட்டு செய்தியாளர்கள் புஷ்ஷைக் குடைந்தெடுத்தனர். அதற்குப் பதில் அளித்த பவல், சிலவேளைகளில் புலனாய்வுத் தகவல்கள் சரியாயிருக்கின்றன. சிலவேளைகளில் தவறாகி விடுகின்றன எனக் கூறினார்.

இந்த விவகாரம் தற்போது அமெரிக்காவில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி வருவதனால் புஷ்ஷும் பவலும் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர்.

## சாகித்யா இசை பயிற்சி நிலையம்
### புதிய வகுப்புகள் ஆரம்பம்

❊ ஓகன் ❊ ஹார்மோனியம் ❊ மெலோடிக்கா

காலம்: 13-07-2003 ஞாயிறு காலை 9.30 மணி

இடம்: சிவசக்தி பாலர் பாடசாலை
மாரி அம்மன் வீதி, திருநெல்வேலி.

(20081)(21-13-19)

ஆசிரியர்: கலாவித்தகர் ந.செல்வச்சந்திரன் Dip.in.Music



## பணிநிலை வேண்டுகை

1. உணவு பரிமாறுவோர் (டீப்பிளையர்) - 14 பேர்
2. சமையல் வேலையாளர்கள், உதவியாளர்கள் - 6 பேர்
3. இடியப்ப வேலையாளர்கள், உதவியாளர்கள் - 4 பேர்
4. ரீ மேக்கர் (தேநீர் தயாரிப்பாளர்) - 2 பேர்
5. துப்புரவு பணியாளர்கள் - 4 பேர்

மேற்படி பதவி வெற்றிடம் நிரப்ப தகுதியானவர்கள் கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்புகொள்ளவும். சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும். தங்க விரும்புவோருக்குத் தங்குமிட வசதி செய்துதரப்படும்.

*36, 38, பெரியகடை,*
*யாழ்ப்பாணம்.*

T.P.: 222 2373

(20066)(24-15-19-21-13)


## 45ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் சந்திரன் சிறிகரன்

உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனை வேண்டுகிறோம்

மண்ணில்: 05-12-1986
விண்ணில்: 29-05-2003
போயிட்டி நீர்வேலி,

*பிரிவால் துயருறும்:*
அம்மா, அப்பா, அக்கா,
அண்ணா, குடும்பத்தினர்.

(21-13-19) (20107)

## 31 ஆம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் வேலுப்பிள்ளை இராசரத்தினம்

(வெள்ளாம்போக்கட்டி - கொடிகாமம்)

தோற்றம்
01.01.1938

மறைவு
12.06.2003

பண்புடன் பாரில் வாழ்ந்து மறைந்த பாசமுள்ள
தந்தையே!
எம்முடன் வாழ்ந்த நாள்கள் என்றும் நெஞ்சை
விட்டகலாது
நீங்கள் விண்ணுலகில் சாந்தி பெற
வேண்டுகின்றோம்.

எங்கள் குடும்பத் தலைவர் இறந்த செய்தி கேட்டு துயரத்தில் பங்கேற்றும் ஆறுதல் கூறியும் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (12-07-2003) சனிக்கிழமை நிரந்தர முகவரி இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
சகோதரர்கள்,
பேரப்பிள்ளைகள்.

*தற்காலிக முகவரி:*
*முடமாவடி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*திருநெல்வேலி.*

*நிரந்தர முகவரி:*
*வெள்ளாம்போக்கட்டி,*
*கொடிகாமம்.*

(19945)(21-13-19)

# மக்கள் வங்கி
# அறிவித்தல்

மக்கள் வங்கியின் யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையிலும், சுன்னாகம் கிளையிலும் 31-12-1984 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையில்

## பகிரங்க ஏல விற்பனை
### செய்யப்படும்

| கிளைகளின் விவரம் | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் செய்யப்படும் இடம் |
|---|---|---|
| யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளை | 19-07-2003இருந்து - → 22-07-2003வரை | யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளை |
| சுன்னாகம் கிளை | 26-07-2003 இருந்து - → 29-07-2003 வரை | யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளை |

யாழ்.பிரதேச முகாமையாளர்,
மக்கள் வங்கி.

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி

(சி-28728) (21-13-19)

## நகரசபை, சாவகச்சேரி
# கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் 28.07.2003ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அதே தினம் 10.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

நிர்மாணப் பயிற்சி நிலையத்தில் (இக்ராட்) 'தரம் எம் 9' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுபெற்ற ஒப்பந்தகாரர் மாத்திரமே கேள்விப் பத்திரங்கள் கோருவதற்கு தகைமையுடையவராவார்.

ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் ரூபா | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் (வற்றுடன்) ரூபா |
|---|---|---|---|
| 01. | நெல்லியடி முருகன் வீதி திருத்தம் | 2000.00 | 600.00 |
| 02. | மத்தியவீதி 2ஆம் குறுக்குத் தெரு தொகுதி - 1 திருத்தம் | 1500.00 | 600.00 |
| 03. | யாழ். வீதி 2ஆம் ஒழுங்கை திருத்தம் | 2200.00 | 600.00 |
| 04. | கண்டுவில் ஒழுங்கை திருத்தம் | 1500.00 | 600.00 |
| 05. | மத்திய வீதி 2ஆம் குறுக்குத் தெரு தொகுதி 11 திருத்தம் | 1500.00 | 600.00 |

கேள்விப் பத்திரங்களை சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் 24.07.2003ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை மேற்குறித்த கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விப் படிவக் கட்டணத்தையும் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் படிவங்கள் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி 'செயலாளர், நகரசபை, சாவகச்சேரி' என்ற முகவரிக்கும் இணைப்பிரதி 'பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கும் 28.07.2003ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படவேண்டும்.

இது தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மு.செ.சரவணபவ
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
10.07.2003.

(C/28870) (21-13-19)

உதயன்

# வேதாளம் மீண்டும் முருங்கை மரத்திலா?

நோர்வே ஊடாக விடுதலைப் புலிகளின் பரிசீலனைக்கு அரசாங்கம் அனுப்பவிருக்கும் ஆலோசனைகள் பற்றி அமைச்சரவைப் பேச்சாளரும் அரசுதரப்பு பேச்சுக்குழுத் தலைவருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் சில தகவல்களை நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்தார்.

பேராசிரியர் உதிர்த்த விடயங்கள் பத்திரிகைகளிலும், இலத்திரனியல் ஊடகங்களிலும் வெளிவந்ததை அடுத்துப் பலரும் இப்போது சமாதானப் பேச்சுக்களைப் பொறுத்தவரையில் வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறுகிறதோ என்று சந்தேகிக்கிறார்கள்.

புலிகளின் பரிசீலனைக்காகச் சமர்ப்பிப்பதற்கு அரசு தயாரித்துவைத்திருக்கும் ஆலோசனைகளைப் புலிகள் ஏற்றுக்கொள்வார்களா?

அந்த ஆலோசனைகளை ஏற்றபடி திருத்துவதற்கு வேண்டிய யோசனைகளைத் தெரிவிக்கவாவது புலிகள் மனம் கொள்வார்களா?

இப்படியான கேள்விகள் எழுப்பப்படுகின்றன. மொத்தத்தில் இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் இப்போதைக்குத் தொடங்குவது சாத்தியப்படுமா என்ற சிந்தனை சமாதானப் பிரியர்களை வாட்டுகிறது.

புலிகள் கேட்டதைக் கொடுக்க அரசு இன்னும் முன்வரவில்லை. அவர்கள் கேட்டது முழு அரசியல் நிர்வாக அதிகாரங்களுடன் கூடிய ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு.

அரசோ அதற்கு மாற்றீடாக மாகாண நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் ஆலோசனைகளையே புலிகளிடம் சமர்ப்பிக்க இருக்கிறது என்று பேராசிரியர் பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

'இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை - முழு விவரங்களும் அடங்கிய தெளிவான வரைவை - தாருங்கள். அதை நன்றாகப் படித்துப் பரிசீலனை செய்து வேண்டிய திருத்தங்களை எமது யோசனைகளாகத் தெரிவிக்கிறோம். அவைபற்றி இருதரப்பும் கலந்து ஆலோசித்து இறுதியான இடைக்கால நிர்வாக கட்டமைப்பைத் தயாரித்துக்கொள்ளலாம்' என்றுதான் புலிகள் தெரிவித்தார்கள்.

அரசு சமர்ப்பிக்க இருப்பது பூரணமான வரைவு அல்ல. மாகாண நிர்வாகக் கட்டமைப்பு சம்பந்தமான எண்ணக்கருத்துக்களையே அரசு சமர்ப்பிக்க இருக்கிறது. அவைபற்றிப் புலிகளின் கருத்துக்களை அறிந்து, இருதரப்பும் கலந்துபேசி இறுதிக் கட்டமைப்பைத் தயாரிக்கப்போவதாக பேராசிரியர் பீரிஸ் தெரிவித்திருக்கிறார். அது சாத்தியப்படுமா? சமாந்தரக் கோடுகள் சந்திக்க முடியுமா?

இந்த விடயத்தில் அரசு முன்னர் சில தவறுகளை விட்டுவிட்டது என்பதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க டோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் ஒப்புக்கொண்டார்.

மாநாட்டிலே பிரதமர் தாம் நிகழ்த்திய உரையில்-

"நாங்கள் கூட உணர்ந்துகொள்வதைத்தான் கடந்த சில வாரங்களாகப் புலிகளின் நடவடிக்கைகளும் வெளிப்படுத்துகின்றன.

"நாங்கள் முன்வைத்த கட்டமைப்பு அதிக குழப்பமானதும் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்குத் தூரமானதாகவும் இருந்தது. மக்கள் துரிதமாக ஏற்றுக்கொள்ளப் போதுமானதாகவும் அந்தக் கட்டமைப்பு இருக்கவில்லை என்பது இப்போது தெளிவாகிறது".

இப்படிக் கூறித்தான் மாநாட்டிலே புதியதொரு கட்டமைப்பைப் பிரதமர் அறிவித்தார்.

"இடைக்காலத் தேவைக்குப் புதுமையான தற்காலிக நிர்வாகக் கட்டமைப்பை (Innovative Provisional Administrative Structure) நாங்கள் தயாரிக்க வேண்டியுள்ளது.

"அது வடக்கு - கிழக்கின் புனரமைப்புக்கும் அபிவிருத்திக்கும் இடைக்கால மாற்று நடவடிக்கைக்கும் (Administrative aspects of the Transtional Process) பொறுப்பாக இருக்கும்" என்றார் பிரதமர்.

அதில் அரசியல் அதிகாரங்களும் மற்றும் முக்கிய விடயங்களும் இல்லாததை அடுத்து அதையும் புலிகள் நிராகரித்துவிட்டார்கள்.

மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கு எத்தகைய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தேவை என்று புலிகள் கருதுகிறார்கள் என்பதை அரசு நன்றாக உணர்ந்துகொண்ட பின்னரும் இடைக்கால நிர்வாகக்கட்டமைப்புக்குப் பதிலாக மாகாண நிர்வாகக் கட்டமைப்பு சம்பந்தமான வெறும் எண்ணக்கருவையே புலிகளின் பரிசீலனைக்கு அனுப்புகிறது.

இது தற்செயலானது என்று கொள்ள முடியுமா? அரசு மனதில் ஏதோ மறைவான செயல்திட்டத்தை வைத்துக்கொண்டுதான் காரியமாற்றுகிறதோ என்று பலரும் சந்தேகிக்கிறார்கள்.

அரசு அதை நீக்கும் வழியில் நடவடிக்கையில் இறங்குமா அல்லது நடப்பது நடக்கட்டும் என்று சும்மா பார்த்துக்கொண்டு காலத்தைக் கடத்தி வருமா?

---

கொழும்புத்துறைப் பிரதேசத்தில்

# மணல் அகழ்வுக்கான அனுமதிகள் துஷ்பிரயோகம் என முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஜூலை12

மணல் அகழ்வதற்கு பிரதேச செயலாளர் வழங்கிய அனுமதிப் பத்திரத்தை தவறாகப் பயன்படுத்தி சட்டவிரோதமாக மணல் அகழும் நடவடிக்கை கொழும்புத்துறைப் பகுதியில் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

குறிப்பாக அரியாலை முள்ளி, கொழும்புத்துறை நாவலடி பகுதிகளில் உள்ள தனியார் காணிகளிலேயே இத்தகைய சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது.

அரியாலை ஜே95, ஜே96 கிராம அலுவலர் பிரிவுகளில் மலசல கூடங்கள் மற்றும் கிணறுகளின் புனரமைப்புப் பணிகளுக்கென பிரதேச செயலாளரினால் மணல் அகழ அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

இந்த அனுமதிப்பத்திரங்களின் பிரதிகளைப் பயன்படுத்தி சிலர் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுவதாகப் பொதுமக்கள் கூறுகின்றார்கள்.

இதேநேரம், மக்கள் குடியமர அனுமதிக்கப்படாத பூம்புகார் பகுதியில் - படையினரின் கண்காணிப்பில் உள்ள - தேவாலயம் ஒன்றின் புனரமைப்புப்பணிக்கு மணல் அகழப்படுகிறது.

இதனைப் பயன்படுத்தி வேறு சிலர் பூம்புகார் பகுதியில் தனியார் காணிகளிலும் மணல் அகழ்ந்து வருவதாகவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர். (ஒ-86)

---

# நாட்டு நடப்பு

## நவீன மாப்பிள்ளை

வந்ததும் வெளி நாட்டானை
வரவேற்றது புறோக்கர் கூட்டம்
சொந்தமாய் குறிப்பு இல்லையென
சோதிடரிடம் கூட்டிச் சென்றார்
எந்த நட்சத்திரத்தில் குறிப்பு
ஏற்றது உமக்கு என்றான்
வந்த நல் புறோக்கர் கூடி
வதனியின் குறிப்பைக் காட்ட
இந்தக் குறிப்பிற்கேற்ற தொன்று
எழுதி நீர் தாருமென்ன
மந்திபோல் முகத்தானுக்கு
"மகத்தினில்" எழுதித் தந்தான்
ஐந்து இலட்சம் இனாமாய்த் தந்து
அமைத்தனர் பெரிய பந்தல்
வந்தனள் மணவறைக்கு வதனி
வந்திலன் மணவாளன் அங்கு
முந்திய இரவே அன்னான்
மூட்டையோடு கம்பி நீட்டி விட்டான்.

- விகடகவி

---

# பேர்னாட் குணதிலக சீனாவுக்கு சென்றார் சமாதான முயற்சியின் வேகம் குறையுமா?

கொழும்பு,ஜூலை12

அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேர்னாட் குணதிலக நேற்றுமுன்தினம் இரவு திடீரென சீனாவுக்குப் பயணமானார்.

அடுத்தமாத இறுதியிலேயே அவர் மீண்டும் இலங்கைக்குத் திரும்புவார் என்று தெரிகிறது.

சமாதான முயற்சிகளில் முக்கிய பங்குதாரரும் உடனடி மனிதாபிமானத் தேவைகளுக்கான அமைப்பான 'சிரானி'ன் பணிப்பாளர்களில் ஒருவருமான பேர்னாட் திடீரென இலங்கைக்கு வெளியே சென்றிருப்பது சமாதான முயற்சிகளை அரசு மிக மெதுவாக முன்னெடுக்கப் போவதற்கான சமிக்ஞையா என்று கொழும்பு அரசியல் அவதானிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

சீனாவுக்கான இலங்கைத் தூதராகப் பதவி வகிப்பவர் பேர்னாட் குணதிலக. கடந்த ஆண்டு சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டதும் அதில் பங்கேற்பதற்காக பிரதமரின் விசேட அழைப்பின் பேரில் அவர் இலங்கைக்கு வந்திருந்தார். சமாதான முயற்சிகளிலும் முக்கிய பங்காற்றி இருந்தார்.

தற்போது அவர் திடீரென சீனா திரும்பியிருப்பதே அரசியல் வட்டாரங்களில் ஆவலைக் கிளப்பியுள்ளது. இனிவரும் காலங்களில் சமாதான முயற்சிகளை மெதுவாக முன்னெடுக்க அரசு கருதுவதால் பேர்னாட் குணதிலக தனது தூதரகப் பணிகளுக்குத் திரும்ப அரசு அனுமதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-3)

---

கள்ளநோட்டு மோசடியில். சிக்கிய

# தகுதியற்ற மலேசிய நிறுவனத்திடம் கடவுச்சீட்டுகளை அச்சிடும் உரிமை

## சிக்கலில் குடிவரவு, குடியகல்வு திணைக்களம்

கொழும்பு,ஜூலை12

புதிய கடவுச்சீட்டுக்கள் அச்சிடும் உரிமையை, எதுவித அனுபவமுமில்லாத தகுதியற்ற ஒரு மலேசிய நிறுவனத்திடம் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் ஒப்படைத்துள்ளதாக சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிக்கப்பட்டுள்ளதாவது:-

கடவுச்சீட்டுக்களை அச்சிடும் உரிமையைப்பெற்ற மலேசிய நிறுவனம் கள்ளநோட்டு விவகாரத்தில் சம்பந்தப்பட்டிருந்த இந்தோனேசிய "பெரும் பெருறி" என்ற நிறுவனத்தின் பொறுப்பில் கடவுச்சீட்டுக்கள் அச்சிடும் பொறுப்பைக் கொடுத்துள்ளது. இதே வேளை, கடவுச்சீட்டுக்கள் அச்சிடுவதற்கான கணனி மென்பொருளை வழங்க ஒப்புக்கொண்டிருந்த மற்றொரு நிறுவனம் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாகக் காலம் கடந்த நிலையில் இன்னமும் கணனி மென்பொருளை வழங்கவில்லை. இதனால் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் பொதுமக்களுக்கு கடவுச்சீட்டுக்களை விநியோகிக்க முடியாத சிக்கலான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இந்தோனேசிய அரசுக்குச் சொந்தமான "பெரும் பெருறி" நிறுவனம் 1920கோடி இந்தோனேசிய ருபியா நோட்டுக்களை கடந்த ஆண்டில் களவாக அச்சிட்ட விவகாரத்தில் சிக்கியுள்ளது. மேலும் இந்நிறுவனத்தால் அச்சிடப்பட்ட நோட்டுக்கள் இந்தோனேசிய மத்திய வங்கியினால் தடை செய்யப்பட்டு மக்கள் புழக்கத்திலிருந்து முற்றாக நீக்கப்பட்டுள்ளன.

எனவே, இவ்வாறான ஊழல் நிறைந்த நிறுவனம் போலிக் கடவுச்சீட்டுக்களையும் அச்சிட்டு வெளியிடுமானால் உண்மையான, சரியான இலங்கைக்கான கடவுச்சீட்டுக்களை இனங்காண்பதில் உலக நாடுகளைச் சேர்ந்த குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் பெரும் சிக்கல்களை எதிர்நோக்க நேரிடும். அதேவேளை, இலங்கைக்கான கடவுச்சீட்டுக்களைப் பெற்று வெளிநாட்டுப் பிரயாணங்களை மேற்கொள்பவர்கள் ஆபாயகரமான நிலைமையை எதிர்கொள்வர்.

பிரிட்டனின் 'டி லாரு' நிறுவனத்தால் அச்சிடப்பட்ட 'எம்' தொடரிலக்கம் கொண்ட கடவுச்சீட்டுக்களே தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. அவையும் முடிவடையும் தறுவாயில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி)

---

# சுண்டிக்குழிப் பகுதியில் விஷமிகள் அட்டகாசம்

கொழும்புத்துறை,ஜூலை12

பாண்டியன்தாழ்வு மற்றும் சுண்டிக்குழிப் பகுதிகளில் இரவு வேளைகளில் விஷமிகள் கும்பலொன்று அடாவடிச் செயல்களில் ஈடுபட்டு வருகிறது.

இப்பகுதிகளில் நேற்றுமுன்தினம் இரவு பல விஷமச் செயல்கள் இடம்பெற்றுள்ளன.

சுண்டிக்குழிப் பகுதியில் புதிதாக நடப்பட்ட விதானையார் வீதி மற்றும் பிளைச்சர் வீதிகளின் பெயர்ப்பலகைகள் பெயர்த்தெடுக்கப்பட்டு, வேறிடங்களில் வைக்கப்பட்டிருந்தன.

பாண்டியன்தாழ்வில் கடையொன்றின் முன்பாக இருந்த சைக்கிள் நிறுத்தும் 'ஸ்ராண்ட்' மாயமாக மறைந்துள்ளது.

கணக்கர் சந்தியில் உள்ள மின்மாற்றி கட்டடவளவின் இரும்புக்கதவுகள் கழற்றப்பட்டு வேறிடத்தில் வைக்கப்பட்டிருந்தன. மேலும் பல இருப்பிடங்களின் வெளிக்'கேற்றுகள்' அப்புறப்படுத்தப்பட்டன.

இந்த விஷமக் கும்பலின் செயல்களினால் மக்கள் பல அசௌகரியங்களையும், அச்சுறுத்தல்களையும் எதிர்நோக்கி உள்ளனர். (ஒ-30)

### நாளை

ஆனி 28
ஞாயிற்றுக்கிழமை
(13.07.2003)
திதி : பூரணை
முன்னிரவு 11.09வரை
நட்சத்திரம்: பூராடம்
பின்னிரவு 1.08வரை
பூரணை விரதம்
சுபநேரம் : 8.59-10.29
ராகுகாலம் : 04.29-5.59
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

வாழ்க்கையின் வேகத்தைக் கண்டு முறிந்துபோய் விடாதீர்கள். பிரச்சினைகளுக்கு ஏற்ப வளைந்து கொடுத்து முன்னேறுங்கள்.

---

# பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் நிபுணர் இன்றி நோயாளர் அவதி

கரவெட்டி,ஜூலை12

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் மயக்க மருந்து கொடுக்கும் நிபுணர் மற்றும் கதிர் படப்பிடிப்பாளர் ஆகியோர் இன்றி நோயாளர்கள் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிட்டுள்ளது.

கடந்த ஆறு மாதங்களுக்கும் மேலாக மேற்படி அலுவலர்கள் இல்லாமையால் நோயாளர்களை யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்ப வேண்டிய நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை இருந்து வருகின்றது.

இதனால், யாழ் - பருத்தித்துறை போக்குவரத்திலோ அல்லது கால தாமதத்தினாலோ நோயாளர்களுக்கு பாதிப்பு ஏற்படலாம் என அஞ்சப்படுவதாக பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி கலாநிதி டாக்டர் எஸ்.கதிரவேற்பிள்ளை தெரிவித்தார்.

அண்மையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு, சத்திரசிகிச்சை நிபுணர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆயினும், இவர் சத்திரசிகிச்சை செய்வதற்கு முன்னர் நோயாளர்களுக்கு மயக்க மருந்தைச் செலுத்த நிபுணர் இல்லாமையால் சத்திரசிகிச்சை மேற்கொள்வதில் முட்டுக்கட்டைநிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் இந்த வைத்தியசாலையில் எக்ஸ் கதிர் படப்பிடிப்பாளர் இல்லாமையால் அதற்குரிய இடவசதி மற்றும் கருவிகள் இருந்தும் கதிர்ப்படம் பிடிக்க முடியாதுள்ளது. மேற்படி குறைபாடுகள் குறித்து உரிய இடங்களுக்கு அறிவித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் - வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி கலாநிதி டாக்டர் எஸ்.கதிரவேற்பிள்ளை தெரிவித்தார். (ஒ-70)

# தேவை

எமது நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. கணக்காளர் (பெண்)
2. காசாளர் (பெண்)

தகைமை: க.பொ.த. உயர்தரம்
வயதெல்லை: 25 இற்கு மேல்

மாநகர எல்லைக்குள் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**முடிவு திகதி: 20.07.2003**

நேரில் தொடர்புகொள்ளவும்.

தொடர்புகளுக்கு: **பாஸ்ட் ஸ்ருடியோ அன் கலர்லாப்**
392, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(24-15-19) (சி-28869)


# சாயி நிலையத்தில் ஆன்மீக நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை12

யாழ்.பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தில் குருபூர்ணிமா ஆன்மீக நிகழ்ச்சிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.00மணி முதல் நடைபெறவுள்ளன.

நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகும் நிகழ்ச்சிகள் நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவுபெறும்.

வடபிராந்திய சத்யசாயி சேவா நிலைய இணைப்புக் குழுவின் செயலாளர் வி.செகராஜசிங்கத்தின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும். (ஐ)


# வெளிவந்துவிட்டது

(விற்பனையாகின்றது)

"பொதுநிதி அலுவலக முறைமை"

ஆக்கம்:- நா.இராசநாயகம் கணக்காளர் (இ.க.சேவை)

அரச உத்தியோகத்தர்கள், அதிபர் சேவை ஆகியோரின் தடை தாண்டல் (EB) பரீட்சைக்கும் பதவியுயர்வுப் பரீட்சைக்கும் ஏற்ற விளக்கங்களுடன் (வினா விடைத் தொகுப்பு இணைக்கப்பட்டுள்ளது) வெளிவந்துவிட்டது.

விலை ரூபா100/=

கிடைக்குமிடங்கள்:

| | |
|---|---|
| வேல்ட் கொமினிகேசன் | மகேஸ்வரி கணனிவள நிலையம் |
| 140, இராமநாதன் வீதி, | யா/மத்திய கல்லூரி, |
| யாழ்ப்பாணம். | யாழ்ப்பாணம். |
| T.P.: 021-222 - 3603 | T.P: 021-222 - 3658 |

தபால்மூலம் பெறவிரும்புவோர் 120/=இற்கான காசுக்கட்டளையை "நா.தனிகாசலம்" என்ற பெயரில் மேற்படி ஏதாவது ஒரு முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (28864)(19-15-27)


# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 05 - 02 - 1956



ஆண்டவன் அடியில் 02 - 07 - 1993

## திருமதி சி.இந்துமதி

திதி: பூர்வபக்க சதுர்த்தசி (12.07.2003)

ஆண்டுகள் பத்து ஓடி மறைந்தாலும்
உன் அன்பான, அழகான அந்த முகம்,
உன் இனிய நினைவுகள் ஒருபோதும் மறையாதே!
என்றும் உன நினைவால் ஏங்கித் தவிக்கும்:

சுதுமலை மேற்கு,
மானிப்பாய். (20085) (24-15-19)

அம்மா, அக்காமார்,
அத்தான்மார், பெறாமகன்.

# நினைவலையில் மூன்றாம் ஆண்டு விழிநீர்த்துளிகள்

மண்ணில் மலர்வு 1914 - 04 - 14



விண்ணில் உறைவு 2000 - 06 - 15

## திருமதி நாகமுத்து சிதம்பரப்பிள்ளை

திதி: சதுர்த்தசி

இதயமெனும் கோவிலிலே என்றும் இறைவனை வேண்டி நின்றீர்!
இகமதிலே உத்தமியாய் வாழ்ந்த எங்கள் தெய்வமே!
அன்றைக்கடலே! எமது அழகொளிரும் மாணிக்கமே!
ஆண்டு மூன்றானதம்மா! அகிலத்தை விட்டகன்று!
உள்ளமெனும் ஆலயத்தில் உமை இருத்தி வணங்குகின்றோம்
உலகமெனும் மாயையிலே உங்களை நாம் காண்போமா?

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்:

மந்துவில் வடக்கு,
கொடிகாமம். (20046) (24-15-19)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 1940 - 10 - 23



இறப்பு 2001 - 07 - 05

அமரர்

## துரைச்சாமி சுப்பிரமணியம்

(துரை சுப்பிரமணியம் – எழுத்தாளர் – ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்)

திதி: சதுர்த்தசி (12.07.2003)

புன்னகைக்குள் கண்ணசைத்து பாசமுடன் வாழ்ந்தவரே - இன்று
நிரந்தரமாய் கண்மலர்ந்து ஆண்டிரண்டு ஆயினவோ...
ஏங்குகின்றோம் அப்பாவே எம்மிடமே வருகவென்று - இன்றும்
தாங்குகின்றோம் விழிகளிலே உம் நினைவின் சுரங்களை....

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:

34(16), பலாலி வீதி,
யாழ்ப்பாணம். (20039) (24-15-19)

குடும்பத்தினர்.

# மிருதங்க இசை அரங்கேற்றம்

அன்புடையீர்!

கலாபூஷணம் திரு. க.ப.சின்னராசா
(பகுதிநேர விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)
அவர்களின் மாணவர்களும்
ஸ்ரீலங்கா ரெலிகொம், யாழ்ப்பாணத்தில் கடமைபுரியும்
இ.தியாகராஜா - ஈஸ்வரிதேவி ஆகியோரின் புதல்வர்களுமாகிய



செல்வன் தியாகராஜா மோகனராஜா
செல்வன் தியாகராஜா கோகுலராஜா
ஆகியோரின்

## மிருதங்க அரங்கேற்றம்

நாளை (13.07.2003) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு
நல்லூர், துர்க்கா மணிமண்டபத்தில்
பிரம்மஸ்ரீ மா.த.வீரமணி ஐயர் M.A.
அவர்களின் தலைமையில் நடைபெறும். இந்த மிருதங்க அரங்கேற்ற விழாவில்
எமது உற்றார், உறவினர், நண்பர்கள், இசை ரசிகர்கள் அனைவரையும் குடும்ப சகிதம்
வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

காங்கேசன்துறை வீதி, மல்லாகம்.
T.P.: 021 222 3004

திரு.திருமதி தியாகராஜா
குடும்பத்தினர்.

(19861) (22-13-16-24-15-19)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்





அமரர் கந்தையா பாலசிங்கம் — திருமதி பாலசிங்கம் பரமேஸ்வரி

| அமரர் கந்தையா பாலசிங்கம் | | திருமதி பாலசிங்கம் பரமேஸ்வரி |
|---|---|---|
| 22.09.1919 | மண்ணில் | 20.09.1922 |
| 19.02.2002 | விண்ணில் | 23.06.2002 |

திதி: 12.07.2003

அன்பு நெஞ்சங்களே! அணையா தீபங்களே!
ஆண்டொன்றா கடந்தது?
நம்பிடவே முடியவில்லை நானிலமதில்
நீவிர் நிழல்போல் கலந்துவிட்டீர் எம்மில்.
வாழவைத்து வழி காட்டியபடி
வாழ்ந்து கொண்டிருக்கும் உங்கள்:

16/11, சீனியர் ஒழுங்கை,
கொட்டடி, யாழ்ப்பாணம். (20110) (24-15-19)

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# விளையாட்டின் ஊடாக தேசியத்தை கட்டியெழுப்ப கட்டமைப்புத் தேவை!

## கலந்துரையாடலில் பாப்பா வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூலை12

விளையாட்டுத்துறையினூடாக எமது தேசியத்தைக் கட்டியெழுப்புவதற்கு பொருத்தமான கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா.

யாழ். மாவட்டத்திலுள்ள விளையாட்டு உத்தியோகத்தர்கள், சங்கங்கள் மற்றும் விளையாட்டுக் கழகங்களுக்கான விசேட கலந்துரையாடல் அண்மையில் யாழ் .மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளன் தலைமையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பாப்பா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விளையாட்டுத்துறையை மேம்படுத்தவும், அதனை வளர்ப்பதற்கும் நன்கு ஒழுங்கமைப்புச் செய்யப்பட்ட கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு அனைவரும் முன்வர வேண்டும்.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரை ஒட்டுமொத்த ரீதியாக உருவாக்[illegible] விளையாட்டுச் சங்கங்கள் இயங்குகின்றன. ஆயினும் அவை சரியான முறையில் இயங்குவதில்லை. அவை சரியான முறையில் செயற்படுமானால் எமது விளையாட்டுத் துறை சர்வதேச ரீதியில் உச்சநிலையை அடையும்.

இன்றைய காலகட்டத்தில் விளையாட்டுத்துறைக்கு வெளிநாடுகள் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன. ஆனால் எமது மக்களைப் பொறுத்தவரை அத்துறைக்குக் கொடுக்கும் முக்கியத்துவமும் அதன் மீதான ஆர்வமும் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

ஆரோக்கியமானதொரு சமுதாயத்தை உருவாக்க வேண்டியவர்கள் எதிர்கால இளஞ்சந்ததியினரே. அந்தச் சந்ததி திடகாத்திரமாக உருவாகுவதற்கு விளையாட்டுத்துறையை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

யுத்தச் சூழல் காரணமாக வீழ்ச்சியடைந்துள்ள விளையாட்டுத்துறையை நன்கு ஒழுங்கமைப்பதற்கான சூழல் தற்போது ஏற்பட்டுள்ளது. இந்த சூழலைப் பயன்படுத்தி எமது விளையாட்டுத்துறையை மேம்படுத்துவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

எமது தேசியம் அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி கண்டுவரும்போது விளையாட்டுத்துறை மட்டும் பின்னிலையில் இருக்க அனுமதிக்க முடியாது. அதனை வளர்ப்பதற்கான அத்திவாரம் ஒன்று இப்போது சரியாக இடப்படவேண்டும். அதற்கு எமது அமைப்பு முனைப்புடன் செயற்பட்டு வருகிறது.

எமது அமைப்பைப் பொறுத்தவரை எந்த ஒரு தனி நபரையோ அன்றி சங்கங்களையோ அதிகாரிகளையோ கட்டுப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்துடன் செயற்படவில்லை.

ஆனால், விளையாட்டுப் போட்டிகளில் சண்டைகள், சச்சரவுகள் ஏற்படும்போது அவற்றைக் கட்டுப்படுத்த இறுக்கமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது தவிர்க்க முடியாததுமாகும்.

தமிழனுக்கென்று தனித்துவம் உண்டு. அவனுக்கென்று ஒரு தனித்துவமான உறுதியான தலைமை உண்டு என்பதனை அனைவரும் நன்கு உணரவேண்டும். எனவே, நடைபெறும் விளையாட்டுக்களின் போது எமது தனித்துவம் நிலைநாட்டப்படுவதை அனைவரும் உறுதி செய்ய வேண்டும்.

எனவே, எமது மண்ணில் நடக்கும் விளையாட்டு நிகழ்வுகளில் எமது தேசியம் பேணப்படவேண்டும் என்று பாப்பா தெரிவித்தார். (ஒ-5)




இருபாலை மக்கள் நலன்காக்கும் பிரிவு அண்மையில் நடத்திய அங்கத்தவர் சந்திப்பு மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் மேற்படி அமைப்பின் தலைவர் வ.செல்லத்துரை உரையாற்றுவதையும், பிரதமவிருந்தினராகப் பங்கேற்ற முன்னாள் மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

## கண்காட்சி

வலிகாமம் தெற்கு பிரதேச சபை உள்ளூராட்சி வாரத்தையொட்டி, சனசமூக நிலையங்களின் சமாசமும், முன்பள்ளி ஆசிரியர் சங்கமும் ஒன்றிணைந்து கண்காட்சி ஒன்றை இம்மாதம் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடத்துவதற்கு ஒழுங்குசெய்துள்ளன.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் அன்றைய தினம் காலை 8மணிமுதல் மாலை 5மணி வரை இக்கண்காட்சி இடம்பெறும். (ஒ-152)

## நாடக நிகழ்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை12

யாழ்பல்கலைக்கழக வெறுவெளி அரங்கக் குழுவினரால் நாளை நடத்தப்படவிருந்த நாடக நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-10)

## இந்து கலாசார அமைச்சின் செயலராக வைத்திலிங்கம் பதவியேற்பு

யாழ்ப்பாணம்,ஜூலை12

இந்து கலாசார அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராக து. வைத்திலிங்கம் நேற்றுமுன்தினம் பதவியேற்றுக்கொண்டார்.

யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபராக நீண்டகாலம் பணிபுரிந்தவர் து.வைத்திலிங்கம். பதவியேற்றதும் கலாசார அலுவலர்களுக்கு கூட்டம் ஒன்றை அவர் நடத்தினார்.(ம-3)

## சமய அறிவுப்போட்டி

வலிகாமம் தெற்கு,ஜூலை12

ஊரெழு, கிளானைபதி ஸ்ரீ பர்வதவர்த்தனி அபினா மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு மேற்படி ஆலய பரிபாலன சபையினர் சமய பொது அறிவு போட்டியொன்றினை நடத்த உள்ளனர்.

பாடசாலை மாணவர்களுக்கான மேற்படி போட்டி தொடர்பான வினாக் கொத்துப்படிவம் தற்போது சபையினரால் விநியோகிக்கப்பட்டுவருகின்றது.

இப்போட்டியில் முதலாவது பரிசாக தங்கப்பதக்கம் வழங்கப்படும். மேலும் பத்துப்பேருக்கு பெறுமதி வாய்ந்த பல பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

வினாக்கொத்துப் படிவங்களை வாங்கிப் பூர்த்திசெய்து இம்மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் ஊரெழு [illegible] செயலாளர் வி.கிருபாகரனுக்கு அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஒ-152)

## நூல் அறிமுகவிழா

யாழ்ப்பாணம்,ஜூலை12

இ.சிறிஸ்கந்தராசா எழுதிய 'நகைச்சுவைப் பூக்கள்' நூல் அறிமுகவிழா சிவஸ்ரீ சஸ்ரீகாந்தக் குருக்கள் தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நூலின் மதிப்புரையை ஓய்வுபெற்ற கல்விப்பதிகாரி அ.தற்பராணந்தனும் நயப்புரையை இயல்வாணனும் நிகழ்த்தவுள்ளனர். (ஒ-10)

## கூட்டுறவு தின பேச்சுப் போட்டி

சர்வதேச கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு யாழ்மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே அச்சுவேலி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் பேச்சுப் போட்டிகளை நடத்தவுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை பிரிவு வாரியாக பாடசாலை அதிபரூடாகவோ அல்லது தபால் மூலமாகவோ சங்கப் பணிமனையில் ஒப்படைக்குமாறு சங்கத்தின் பொது முகாமையாளர் கேட்டுள்ளார். (ஒ-6)

## மீளக்குடியமர அனுமதிக்குமாறு பூம்புகார் மக்கள் கோரிக்கை

### பல்வேறு தரப்புக்கும் மகஜர் சமர்ப்பிப்பு

வலி.வடக்கு,ஜூலை12

அரியாலை பூம்புகார் பகுதியைச் சேர்ந்த பன்னிரெண்டு குடும்பங்கள் தங்கள் சொந்த இடத்தில் மீளக் குடியமர உடன் அனுமதிக்கவேண்டுமெனக் கோரி போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளன.

இந்த முறைப்பாட்டுப் பிரதிகள் மனித உரிமைகள் ஆணைக்குழு, அகதிகளுக்கான ஐ.நா தூதரகம், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மற்றும் நல்லூர் பிரதேச செயலாளர் ஆகியோரிடமும் கையளிக்கப்பட்டுள்ளன.

அந்த முறைப்பாட்டுக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த எட்டு வருடங்களாக சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்த நாம் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றோம்.

தற்போது வசித்துவரும் வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே எமது சொந்த இடங்களில் மீளக்குடியமர ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி தங்களைக் கேட்டுக்கொள்கின்றோம் - என்று அதில் உள்ளது. (எ-86)

## ஈச்சமோட்டை குளக்கரையில் குப்பை கொட்ட வேண்டாம்!

### சனசமூக நிலையம் கோரிக்கை

அரியாலை,ஜூலை12

ஈச்சமோட்டை விளையாட்டு மைதானத்திற்கு அருகில் உள்ள மக்கி குளத்தின் கரையில் குப்பை மற்றும் கழிவுப்பொருள்களை கொட்ட வேண்டாம் என்று ஈச்சமோட்டை சனசமூக நிலையம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த குளக்கரையில் குப்பை மற்றும் கழிவுப்பொருள்களை கொட்டுவதால் குளப்பகுதியும் அதனை அண்டிய பகுதிகளும் அசுத்தமடைந்து காணப்படுகின்றன.

அத்துடன் குப்பை மற்றும் கழிவுப் பொருள்கள் குளப் பகுதியில் நிரம்புவதால் மாரிகாலங்களில் வெள்ளம் தேங்கும் அபாயமும் உருவாகி வருகிறது. (ஒ-17)

## காணாமற்போன மீனவர்கள் 6நாள்களின் பின்னர் மீட்பு!

மட்டக்களப்பு,ஜூலை12

மட்டக்களப்பு, சாய்ந்தமருதுக் கடலில் மீன்பிடிக்கச்சென்று காணாமற்போன மூன்று மீனவர்களும் 6நாள்களின் பின்னர் வாழைச்சேனைக் கடற்பரப்பில் வைத்து ஏனைய மீனவர்களால் மீட்கப்பட்டுள்ளனர்.

ஆறு நாள்களாக ஆழ்கடலில் தத்தளித்துக்கொண்டிருந்த இந்த மூன்று மீனவர்களும் சாய்ந்தமருதிலிருந்து 25கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள கடற்பரப்பில் வைத்து சக மீனவர்களால் மீட்கப்பட்டு அவர்களது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடந்த புதன்கிழமை சாய்ந்தமருது கடற்பரப்பில் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டிருந்தபோது அவர்களது கண்ணாடி இழைநார் படகில் பொருத்தப்பட்டிருந்த இயந்திரம் பழுதடைந்த காரணத்தினால் படகு ஆழ்கடலுக்கு இழுத்துச் செல்லப்பட்டதாகவும் -

மீனவர்கள் மூவரும் மீட்கப்படும்போது மிகவும் சோர்வடைந்து காணப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

## கொத்தியாலடி மயான வீதியில் சகிக்க முடியாத துர்நாற்றம்

வலி.தெற்கு,ஜூலை12

சுன்னாகம், கொத்தியாலடி மயான வீதிப் பகுதியில் மோசமான துர்நாற்றம் வீசுவதாக பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீதியின் இரு புறங்களிலும் பற்றைகள் நிறைந்திருப்பதாகவும் -

அங்கு கொட்டப்படும் கழிவுப் பொருள்களில் இருந்தே இத்துர்நாற்றம் எழுவதாகவும் -

தெரியவருகின்றது.

ஆடு, மாடு, கோழி என்பவற்றை வெட்டுபவர்கள் அவற்றின் கழிவுகள், எலும்புகள் என்பவற்றை இப்பகுதியில் கொண்டுவந்து போடுவதாகவும் -

அவற்றை காகம், நாய் போன்ற பிராணிகள் கொத்தி, கடித்து சிதறடிப்பதால் அவற்றில் இருந்து துர்நாற்றம் எழுவதாகவும் -

பொதுமக்கள் கூறுகின்றனர்.

இச்சுகாதார சீர்கேட்டினால் தொற்று நோய்கள் பரவக்கூடிய ஆபத்து இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்நிலையைச் சீர்செய்ய விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். (ஒ-152)

## களுத்துறை மாவட்டத்தில் புயலுடன் கடும் மழை

## வீட்டுக் கூரைகள் பிய்த்தெறியப்பட்டன! மரங்கள் முறிந்தன; மின்கம்பங்கள் சேதம்!!

களுத்துறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை கடும் மழையுடன் வீசிய புயல் காற்றினால் பல இடங்களில் மரங்கள் முறிந்து விழுந்தன.

வீடுகளின் கூரை ஓடுகளும், தகரங்களும் காற்றினால் வீசியெறியப்பட்டன.

களுத்துறை நீதிமன்ற வளவில் இருந்த பாரிய தேக்கு மரமொன்று வீழ்ந்ததினால் நீதிமன்ற மதிலுக்கும், தொலைபேசிக் கூண்டு ஒன்றுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

பல இடங்களில் மின்கம்பங்களுக்கும், தொலைபேசிக் கம்பங்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கடல் கொந்தளிப்பு காரணமாக மீனவர்கள் ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லவில்லை. மாவட்டத்தில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

## மா.சபை உறுப்பினர் பாதுகாப்புக்கு இரு பொலீஸார், ஒரு கைத்துப்பாக்கி

### ஜனாதிபதிக்கும், அரசுக்கும் எதிர்க்கட்சி கோரிக்கை

மாகாணசபை உறுப்பினர்களின் பாதுகாப்புக்கு இரு பொலீஸாரின் சேவையும் ஒரு கைத்துப்பாக்கியும் வழங்கப்பட வேண்டுமென்று பொ.ஐ. முன்னணி மாகாணசபை உறுப்பினர்கள் ஜனாதிபதியிடமும் அரசிடமும் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கடந்த புதனன்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற ஒரு கூட்டத்திலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் 1989 ஆம், 1990ஆம் ஆண்டு காலப் பகுதியில் மாகாண சபை உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டது எனவும் அப்பாதுகாப்பு அவர்களுக்கு மீண்டும் வழங்கப்படவேண்டும் எனவும் சொன்னார்.

## பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவ புனர்வாழ்வு நிறுவனம் நடவடிக்கை

### உதவுமாறு இணைப்பாளர் வேண்டுகோள்

கிளிநொச்சி,ஜூலை12

கிளிநொச்சி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் பல்வேறு உதவித் திட்டங்களை செயற்படுத்திவருவதாக அந்த நிறுவனத்தின் இணைப்பாளர் தெரிவித்தார்.

கணவனால் கைவிடப்பட்டவர்கள், காதலனால் ஏமாற்றப்பட்டவர்கள், சீதனக்கொடுமையால் பாதிப்படைந்தவர்களென பல்வேறு பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட சுமார் 256 பெண்களுக்குத் தமது நிறுவனம் உதவி செய்துள்ளதாக இணைப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

பாதிக்கப்பட்ட பெண்களின் நலனைக் கருத்திற்கொண்டு சிறுகைத் தொழில் முயற்சிகள் அவர்களுக்கென ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. கணனி மற்றும் தையல் பயிற்சி வகுப்புகளும் அவர்களுக்கு நடத்தப்பட்டு வருகின்றன. இதன்மூலம் அவர்கள் தமது பிரச்சினைகளில் இருந்து ஓரளவு விடுபடமுடிகிறது.

அத்துடன் இப்பெண்கள் தமது பிரச்சினைகளுக்கு நீதிமன்றின் மூலம் தீர்வு காண்பதற்காக சட்ட ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கி வருகிறோம்.

இப்பெண்கள் தவிர 93 சிறுவர்களும் எமது நிறுவனத்தினால் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இச்சிறுவர்கள், சட்டபூர்வமாகத் திருமணமாகாத தாய், தந்தையருக்கு பிறந்தவர்களாவர். இவர்களையும் நாம் பராமரித்து வருகின்றோம் என்று தெரிவித்துள்ளார்.

இந்தப் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்துக்கு நிதியுதவி செய்ய விரும்புவோர் இலங்கை வங்கி, சேமிப்புக்கணக்கு இலக்கம் 24562, பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-10-78)

## சாவகச்சேரி சங்கத்தானை வைரவ சுவாமி, கந்தசுவாமி ஆலய பொதுச்சபைக் கூட்டம் - 2003

இடம் : ஆலய மண்டபம்
காலம் : 27.07.2003 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணி
தலைவர் : திரு.செ.ஸ்ரீநிவாசன் *(பிரதேச செயலர், தென்மராட்சி)*

சகல அங்கத்தவர்களையும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி வேண்டுகின்றோம். பிரேரணைகள் 20.07.2003 வரை ஆலய பரிபாலனசபையால் ஏற்றுக்கொள்ளப்படும். இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெறும்.

(24-15-19) - ஆலய பரிபாலன சபை.

*குறிப்பு:* அங்கத்தவர்கள் வருடச் சந்தாவை 20.07.2003இற்கு முன்னர் செலுத்திப் (20133) பற்றுச்சீட்டைப் பெற்று அங்கத்துவத்தைப் புதுப்பித்துக்கொள்ளவும்.

THE HALO TRUSR

## 'த ஹலோ டிரஸ்ட்'
## மொழிபெயர்ப்பாளர் தேவை

வெளிநாட்டவர் ஒருவருடன் யாழ்ப்பாண மாவட்டத்துக்குள் மொழி பெயர்ப்பாளராகக் கடமையாற்றக்கூடிய ஆண் அல்லது பெண் தேவை. விண்ணப்பிப்பவர் சரளமாக ஆங்கிலம் பேசக்கூடியவராகவும் 3 கிழமை மிதிவெடி எடுக்கும் பயிற்சியில் ஈடுபடத் தயாராக இருப்பவராகவும் இருக்கவேண்டும். கடின உழைப் பாளிகள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

உங்கள் விண்ணப்பங்களை 13.07.2003 - 14.07.2003 ஆம் திகதிக்கு முன்னதாக அல்லது அன்று இவ்விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும்.

**த ஹலோ டிரஸ்ட்**
(20129) 655, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (24)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 11 - 07 - 1932



மறைவு 12 - 06 - 2003

திருமதி
## தேவசகாயம் சந்தானநாயகி

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்த உங்களை எங்களால் மறக்கமுடியவில்லையே!

உங்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (12.07.2003) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
சகோதரி, பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டி.

*4ஆம் குறுக்குத்தெரு,*
*பருத்தித்துறை.*
(20062) (26-24-15-19)

## ஓராண்டு வந்ததுவோ? அம்மா!

தாயின் மடியில் 1934 - 01 - 21



இறைவன் அடியில் 2002 - 06 - 23

## திருமதி மரியாம்பிள்ளை பரமேஸ்வரி

திதி:- 12.07.2003

*அன்பு காட்டி நின்றாய் அம்மா!*
*நான் இருக்கப் பயம் ஏன்? என்றாய் அம்மா!*
*ஊரார் பசிபோக்கி நின்றாய் அம்மா!*
*எனது பிள்ளையின் பசி போய்விட்டது என்றீர் அம்மா!*
*பார்க்கும் இடமெல்லாம் பாசமுகம் தெரியுதம்மா!*
*எவருக்கும் தீங்கெண்ணா அன்புருவே எம் அம்மா!*
*நாள் முழுதும் நடமாடிய எம் அம்மா!*
*எந்நாளும் எம்மோடு வாழ்ந்திடுவீரென்றெண்ணினோம் அம்மா!*
*கொடிய நோய் வந்ததுவோ அம்மா!*
*கொண்டு போறன் என்று ஓர் சொல் கூறினாயோ அம்மா!*
*நாம் படும் வேதனைகள் உங்களுக்குத் தெரியவில்லையோ அம்மா!*
*அம்மாவை இழந்த அநாதைகளோ நாங்கள் அம்மா.........?*
*ஓராண்டு போனதென்ன துயரமது ஆறவில்லையே!*
*எம்நெஞ்சம்தான் மறக்குமோ நின் நினைவை.*
*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!*

*"அன்னை இல்லம்"*
*61, பழைய பூங்கா வீதி,*
*கொய்யாத்தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.*
(20138)(24-15-19)

உங்கள் பிரிவால் வாடும்:
அன்புச் செல்வங்கள், சகோதரர்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,ஜூலை12

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு வலி.மேற்கு பிரதேசசபையும் மற்றும் அட்டகுதி சனசமூக நிலையங்களும் இணைந்து நடத்தும் விளையாட்டுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் தாச்சி சுற்றுப்போட்டி அராலி கனகத்துறை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

ஆண்கள் பிரிவில் பதினொரு சனசமூக நிலையங்களும் பெண்கள் பிரிவில் நான்கு சனசமூக நிலையங்களும் கலந்துகொள்கின்றன. (ஒ-86)

★ ★ ★

கொழும்புத்துறை,ஜூலை12

அரியாலை சனசமூக நிலையத்தின் 54 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி மரதன் ஓட்டம் மற்றும் சைக்கிள் ஓட்டப்போட்டிகள் இன்று இடம்பெறவுள்ளன. (ஒ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை12

வலி.தென்மேற்கு - மானிப்பாய் பிரதேசசபை உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடத்தும் விளையாட்டுப் போட்டிகள் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (ஒ-5)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை12

வடக்கு-கிழக்கு மாகாண மட்ட மெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை முதல் இரு தினங்கள் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இன்றைய போட்டிகளை யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப.திலகநாயகம்போல் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைப்பார். (ஒ-5)

★ ★ ★

வலி.வடக்கு,ஜூலை12

திருநெல்வேலி இந்துவாலிபர் சங்க அபிராமி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு திருநெல்வேலி இந்துதமிழ்கலவன் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதமவிருந்தினராக நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் செ.கைலாசபதி கலந்து கொள்வார். (ம-5-86)

★ ★ ★

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4மணிக்கு கட்டுடை வீநாயகர் மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

மாலை 4.00மணி-இணுவில் அறிஞர் வி.க. எதிர் இணுவில் இந்து வி.க.

மாலை 5மணி - நவாலி தென்றல் வி.க. எதிர் சங்குவேலி ஸ்ரீஅம்பாள் வி.க. (ஒ-5-86)

★ ★ ★

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் நடத்தும் கே.கி.சி. வெற்றிக் கிண்ணத் திற்கான கிரிக்கெற் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

காலை 8.30மணி-ஜொலிஸ்ரார் வி.க. எதிர் கிறாஸ்கொப்பர்ஸ் வி.க.பிற்பகல் 1.00மணி - ஜெனியன்ஸ் வி.க. எதிர் கே.சி.சி.வி.க. (ஒ-5)

## சமயசந்நிதிகளில்

கைதடி,ஜூலை12

கைதடி வடக்கு, கயற்றசிட்டி கந்தசுவாமி ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது. (ஒ-10-75)

★ ★ ★

கோப்பாய்,ஜூலை12

உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயத்தின் தேர் உற்சவம் இன்று சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ஒ-10-72)

★ ★ ★

அரியாலை,ஜூலை12

[illegible] கொட்டடிப்புலம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து 15 நாள்கள் இடம்பெறவுள்ளது. (ஒ-10-17)

உ
சந்நிதியானே சரணம்!

## அருணகிரிநாதர் விழா

தொண்டமனாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய சந்நிதியான் ஆச்சிரமத்தில் நாளை (13.07.2003) ஞாயிற்றுக்கிழமை காலை திருப்புகழ் தந்த பெருமான் அருணகிரிநாதர் விழா வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

பல அறிஞர்களதும் பெரியார்களதும் சிறப்புச் சொற்பொழிவுகள் இடம்பெறும்.

*அடியார்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.*

சைவ கலை பண்பாட்டுப் பேரவை,
தொண்டமனாறு. (சீ-28907) (24-15-19) - சந்நிதியான் ஆச்சிரமம்.

## பொன்விழாவில் வாழ்த்துகின்றோம்



அருட்சகோதரி
### பிறிஜிற் கபேரியல்பிள்ளை
*(இளவாலை திருக்குடும்ப கன்னியர்மடம்)*

கருணை பொங்கும் இதயம், கனிவான மொழி, குமிழ்சிரிப்பு, களைக்காத உடல் கண்ணியமான சேவை, இவையெல்லாம் அருட்சகோதரி பிறிஜிற் அவர்களின் சொத்து. 18.12.1953இல் துறவறத்தில் புகுந்து "சேவை செய்வதே மேலான இன்பம்" என்னும் நோக்குடன் கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாக கத்தோலிக்க சிறுமியர் இல்லத்தைச் செவ்வனே நிர்வகித்துவரும் **அருட்சகோதரி பிறிஜிற்** அவர்களின் பொன்விழாவில் அவரை வாழ்த்தி நிற்கின்றோம். கடல் கடந்து நாம் வாழ்ந்திடினும், அருட்சகோதரி பிறிஜிற் நல்ல உடலாரோக்கியமுடனும் உளமகிழ்வுடனும் நீடூழிகாலம் வாழ்ந்து, நற்பணியை ஆற்றிட ஆண்டவரை நாம் மன்றாடுகின்றோம்.

லண்டன். **திரு. எமில் மகேன்குமார் (கணக்காளர்),**
(20141) (24-15-19) **வைத்திய கலாநிதி திருமதி சிபிலா மகேன்குமார்.**

## ஒத்திவைக்கப்பட்டுள்ளது

யாழ். கைதடி குருசாமி வித்தியாலய நூலக வளர்ச்சி நிதிக்காக 13.07.2003 ஞாயிறன்று கயிற்றசிட்டி கந்தன் தீர்த்தத் திருவிழா நாளில் அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த சீட்டிழுப்பானது தவிர்க்கமுடியாத காரணங்களால் ஒத்திவைப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றேன். அதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**சி.சிவசுதன்**
**(நிர்வாகி).**
(26-24-15-19)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி செரீனா தேவநேசன் அவர்களின் அன்பு மாமனார்

## சாமுவேல் தம்பையா தேவசகாயம்

அவர்கள் 06.07.2003 ஞாயிறன்று கனடாவில் காலமான செய்தியறிந்து நாம் மிகவும் துயருறுகின்றோம். அன்னாரது மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாருக்குக் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

*ஸ்கந்தவரோதயக் கல்லூரி?* [illegible]
*மகா வித்தியாலயம்,*
*சுன்னாகம்.* (20132) (25-24-15-19)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பாடசாலைச் சமூகம்.

## 2ஆவது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 19 - 09 - 1921



உதிர்வு 03 - 07 - 2001

திருமதி
## அருட்செல்வவினாயகம் திலகவதி

[வெல்லிக்கந்தோட்டப் பிள்ளையார் கோவில் முன்னாள் நிரந்தர தர்மகர்த்தா (முகாமையாளர்) துன்னாலை வடக்கு]

திதி:12.07.2003

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே!
எம்மைப் பண்போடும் பாசத்தோடும்
வாழவைத்த அன்புத் தெய்வமே! அம்மா
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
ஈராண்டு கழிந்தாலும்
தங்கள் நினைவலைகள்
எங்களை விட்டகலாது!
நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்:

*துன்னாலை வடக்கு.* (சீ-28904) (25-24-15-19)

அன்புப் பிள்ளை:
**பாஞ்சாலி.**

# இடைக்கால நிர்வாக அமைப்புக்கு எதிராக ஜே.வி.பியினர் சபையில் கூச்சல் போராட்டம்

## அதை அடுத்து பிரதி சபாநாயகர் சபையை ஒத்திவைத்தார்

இடைக்கால நிர்வாக அமைப்பை எதிர்த்து சபை ஒத்திவைப்புவேளை விவாதம் நடைபெற்றபோது நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது. ஜே.வி.பி. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து வந்து சபாநாயகரின் ஆசனத்துக்கு முன்னால் வந்து அமைச்சர் அஸ்வரைப் பார்த்து ஆவேசமாகக் குரல் எழுப்பிக் கொண்டிருந்தனர். இதை கிஞ்சித்தும் பொருட்படுத்தாது அமைச்சர் அஸ்வர் விவாதத்துக்கு பதிலளித்துப் பேசிக் கொண்டிருந்தார்.

நிதி அமைச்சின் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பின்னர் இடைக்கால நிர்வாக அமைப்பு வழங்கப்படுவதை எதிர்த்து ஜே.வி.பியினரின் ஒத்திவைப்பு வேளை விவாதம் இடம் பெற்றது.

விவாதத்தை ஆரம்பித்து ஜே.வி.பி. உறுப்பினர் விமல் வீரவன்ஸ எம்.பி. உரையாற்ற எழுந்தார். அப்போது கூட்டமைப்பு எம்.பியான இரா. சம்பந்தன் எழுந்து ஒழுங்குப் பிரச்சினை யொன்றை எழுப்பினார். ஒத்திவை வேளை விவாதம் நேரத்துடன் எமக்கு அறிவிக்கப்படவில்லை என்றார். அவரது ஆட்சேபனையைப் பிரதி சபாநாயகர் நிராகரித்தார். அதை அடுத்து விவாதம் ஆரம்பமானது.

விமல் வீரவன்ஸ எம்.பி. உரையாற்றிய பின்னர் கூட்டமைப்பு எம்.பியான எம்.கே.சிவாஜிலிங்கம் பெரும் குறுக்கீடுகளுக்கு மத்தியில் உரையாற்றிக் கொண்டிருந்தார்.

பின்னர் பொ.ஐ.முன்னணி எம்.பியான பந்துல பஸநாயக்கா உரையாற்றினார். அவர் உரையாற்றும் போது ஆளும் தரப்பில் அமைச்சர் அஸ்வர்




மாத்திரமே அமர்ந்திருந்தார். ஆளும் தரப்பு வெறிச்சோடிக் கிடந்தது.

ஜகத் புஷ்பகுமார எம்.பி. அரச தரப்பில் இந்த விவாதத்துக்குப் பதிலளிக்கக்கூடிய பொறுப்பான அமைச்சர்கள் எவரும் இல்லை என்று பிரச்சினையைக் கிளப்பினார். பிரச்சினை சூடு பிடித்தது. அப்பொது விமல் வீரவன்ஸ எம்.பி. எழுந்து நின்று இதே பிரச்சினையை எழுப்பிப் பெருங்குரலில் வாதாடினார். இச்சந்தர்ப்பத்தில் நாடாளுமன்ற விவகார அமைச்சர் எழுந்து,'பொறுப்பான அமைச்சர் சார்பில், நான் பதிலளிக்கின்றேன்' எனக் கூறி உரையாற்றத் தொடங்கினார்.

ஜே.வி.பி. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து சபைக்கு நடுவே வந்து கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர். இவர்களுடன் பொ.ஐ.மு.எம்.பிக்களான டிலான் பெரேரா, ஜகத் புஷ்பகுமார ஆகியோரும் இணைந்து கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர். இந்தக் கூச்சல்களையெல்லாம் சற்றும் பொருட்படுத்தாமல் அமைச்சர் அஸ்வர் தொடர்ந்து உரையாற்றிக்கொண்டிருந்தார்.

கூட்டமைப்பு எம்.பியான எம்.கே. சிவாஜிலிங்கம் தமது ஆசனத்தை விட்டு எழுந்து கூச்சலிட்டுக் கொண்டிருந்த எம்.பிக்களுக்கு மத்தியில் வந்து நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்.

பிரதி சபாநாயகர் சபையைக் கட்டுப்படுத்த முடியாமல் மாலை 4.18 மணிக்கு சபையை ஒத்திவைத்தார்.

படைக்களச் சேவிதர் செங்கோலை எடுத்துச் சென்ற பின்னரும் சபையில் கூச்சல் குழப்பம் தொடர்ந்தது. அமைச்சர் அஸ்வர் கூச்சலிடும் எம்.பிக்களைப் பார்த்து உரத்த குரலில் ஏதோ சொல்லிக்கொண்டிருந்தார். இக்களேபரம் மாலை 4.25 மணி வரை தொடர்ந்தது. (ம)

## சமாதானச்சூழல் நிலவும் செய்தி அறிந்ததுமுதல்

# எப்போது நாடு திரும்புவோமென துடித்துக் கொண்டிருந்தோம்!

### தமிழகத்திலிருந்து படகுமூலம் திரும்பியவர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை12

"எமது நாட்டில் சமாதானச் சூழல் நிலவுகின்றது என்ற செய்தியை அறிந்ததுமுதல் எமது சொந்த மண்ணுக்கு மீண்டும் வருவதற்குத் துடித்துக்கொண்டிருந்தோம். தமிழகத்தில் இன்னும் தங்கியிருக்கும் ஈழத் தமிழர்களின் நிலையும் அதுதான். தாயகம் திரும்ப அவர்கள் ஆவலாக இருக்கின்றனர். இந்திய அரசு அதற்கு அனுமதி வழங்க மறுக்கின்றது.

இந்தியாவிலிருந்து கடந்த புதன் கிழமை அதிகாலை படகுகள்மூலம் நெடுந்தீவில் வந்திறங்கிய ஈழத்தமிழ் அகதிகள் 13 பேர் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

கடந்த செவ்வாயன்று பாம்பன் கடற்கரையிலிருந்து மீன்பிடிப் படகுகளில் தலைமன்னார் நோக்கிய தமது இரகசியப் பயணத்தை ஆரம்பித்த இந்த 13பேரும் கடந்த புதன்கிழமை அதிகாலை நெடுந்தீவுக் கடற்கரையில் இறக்கிவிடப்பட்டிருக்கின்றனர்.

படகுகளைச் செலுத்திவந்த இந்திய மீனவர்களுக்கு தலைமன்னார் செல்லும் கடற்பாதை தெரியாததினால் அவர்கள் வழிதவறி நெடுந்தீவு கடற்கரையில் இந்த 13 பேரையும் இறக்கிவிட்டுச் சென்றுள்ளனர்.

நெடுந்தீவு கிராமசேவையாளருடன் அவர்கள் தொடர்புகொண்டு தமது நிலைப்பாட்டினைத் தெளிவுபடுத்தினர். இதனையடுத்து, கிராமசேவையாளர் அவர்களை அழைத்துச் சென்று பொலீஸாரிடம் கையளித்தார். பொலீஸார் யாழ்.செயலக அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு அந்த 13 பேரையும் செயலக அதிகாரிகளிடம் கையளித்தனர்.

நேற்றுமுன்தினம் நண்பகல் யாழ். செயலகத்துக்கு அழைத்துவரப்பட்ட அவர்கள் அங்கிருந்து அவரவர்களுடைய சொந்த இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 5பேரும் வவுனியாவைச் சேர்ந்த 6பேரும், கொழும்பு, மண்கும்பான் ஆகிய இடங்களைச் சேர்ந்த தலா ஒருவருமாக இந்த 13 பேரும் தமது சொந்த இடங்களுக்கு திரும்ப முன்னர் தமது அகதி வாழ்வின் அவலங்களின் ஒரு பகுதியை 'உதயன்' செய்தியாளரிடம் பகிர்ந்துகொண்டனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:-

கடந்த 1989,90ஆம் ஆண்டு காலப் பகுதியில் இந்திய இராணுவத்தினர் இங்கு நிலைகொண்டிருந்த காலப் பகுதியில் இடம்பெயர்ந்து தமிழகத்துக்குச் சென்றோம்.

அங்கு திருச்சிலுள்ள 'வாழ வந்தான் கோட்டை அகதிமுகாமில் தங்க வைக்கப்பட்டோம். அங்கு தொழில் வாய்ப்புக்கள் போதியளவு இல்லை. கல்லுடைக்கும் கூலித் தொழிலையே செய்துவந்தோம். அதுவும் வாரத்தில் ஓரிரு நாள்கள் மட்டுமே தொழில் கிடைக்கும்.

அதில் வருகின்ற வருமானம் எமது நாளாந்த உணவுக்கே போதாது. தமிழக அரசு 'ரேசன்' தருகிறது. 'ரேசன் காட்டு'க்கு அரிசி மட்டுமே தரப்படும். அரிசியை மட்டும் தின்று உயிர்வாழ முடியுமா? ஏனைய பொருள்களை வாங்க கையில் பணம் இருக்காது.

இதனால் பாதிநாள் பட்டினி கிடக்கவேண்டிய நிலைமைதான் இருந்தது. சிறுபிள்ளைகள் பள்ளிக்கூடங்களுக்கு போகாமல் வேலை தேடி அலையும் அவலம் இப்பொழுதும் அங்கு நடந்து கொண்டிருக்கிறது.

அகதி முகாமில் அடிப்படை வசதிகள் கூட ஒழுங்காகச் செய்யப்படவில்லை. நாங்கள் தங்கியிருந்த முகாமில் மட்டும் 365 குடும்பங்கள் தங்கியிருக்கின்றன. அவ்வளவு பேருக்கும் அங்குள்ள அடிப்படை வசதிகள் போதுமானதாக இல்லை.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானவர்கள் என்று காட்டிக்கொடுக்கப்பட்டால் அவர்கள் உடனடியாகக் கைதுசெய்யப்படுவார்கள். தமிழகப் பொலீஸாரால் இவ்வாறு பலர் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். நிம்மதியான வாழ்வு எமக்கு அங்கு இருக்கவில்லை. கண்ணீரும் கம்பலையுமாகவே நாம் வாழ்ந்தோம். மருத்துவ வசதிகளை உரியளவில் பெறமுடியாத நிலை உள்ளது.

சென்னை போன்ற நகரப் பகுதிகளுக்கு சென்று வருவதற்குக்கூட எம்மிடம் பண வசதியில்லை. 13 வருடங்களுக்கு மேல் அங்கு வாழ்ந்துவிட்டோம். ஆனால், இந்தியாவின் பிரதான நகரங்களுக்கு பலர் ஒரு போதுமே போயிருக்கவில்லை. அவ்வளவுக்குப் பணக்கஷ்டம். இந்த நிலை என்றைக்கு மாறும் என்று ஏங்கித் தவித்தோம்.கடந்த வருடம் இலங்கையில் யுத்தம் ஓய்ந்து சமாதானச் சூழ்நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து எமது சொந்த மண்ணில் மீண்டும் கால்பதித்து நிம்மதியாக வாழ விரும்பினோம். அதற்கு அனுமதிக்குமாறு தமிழக அரசைப் பல தடவைகள் கோரினோம். ஆனால், தாங்கள் உத்தியோகபூர்வமாக இலங்கை அரசிடம் எம்மைக் கையளிக்கும்வரை எங்கும் செல்லமுடியாது என்று அரச அதிகாரிகள் தெரிவித்துவிட்டனர்.

தொடர்ந்து வறுமையினாலும் பல துன்பங்களாலும் கஷ்டப்பட்ட நாங்கள் இரகசியமாக மீனவர்களின் படகுகளில் நாடு திரும்பத் தீர்மானித்தோம். பல தடவைகள் பயணத்துக்கான ஆயத்தங்களுடன் படகில் ஏறி சிறிது தூரம் சென்ற பின்பு கடற்படையினரின் நடமாட்டத்தை அவதானித்து திரும்பிச் சென்றோம்.

இலங்கை கடற்படையினர் மற்றும் இந்தியக் கடற்படையினரின் கண்களில் அகப்பட்டால் என்ன நடக்கும் என்பதும் எமக்கு நன்றாகத்தெரியும். இருந்தாலும் எதற்கும் துணிந்துதான் புறப்பட்டோம். ஒவ்வொருவருக்கும் படகுக்கு 2ஆயிரத்து 500ரூபா (இந்தியப்பணம்) வீதம் செலுத்தியே படகில் பயணித்தோம்.

குடும்பங்களிலுள்ள அனைவரும் வருவதற்கு பணம் இல்லாததால் ஒவ்வொரு குடும்பங்களிலும் இருந்து இருவர், மூவர் வீதமே வரமுடிந்தது. இனி இங்கிருந்து உழைத்து அங்கிருப்பவர்களையும் அழைப்பதற்கு எண்ணியுள்ளோம்.

எம்மை அழைத்து வந்த மீனவர்கள் படகில் ஏற்றுவதற்கு முன்னர் எம்மை நோக்கி கும்பிட்டவாறு "தற்செயலாக நீங்கள் கடற்படையினரிடம் பிடிபட்டால் தயவுசெய்து எம்மையும் காட்டிக்கொடுத்துவிடாதீர்கள். உடனே பொடா சட்டத்தின்கீழ் எம்மை தமிழகப் பொலீஸார் கைதுசெய்து சிறையில் அடைத்துவிடுவார்கள் என்று கேட்டுக்கொண்டனர்.

இத்தனை ஆபத்துகளுக்கு மத்தியில் ஒருவாறு எமது தாயகத்தில் கால்பதித்துவிட்டோம் இனி எமக்கு எந்தப் பயமும் இல்லை.

- என்று தெரிவித்தனர். (ம-4)

### மகளிர் அபிவிருத்தி சங்கம் அங்குரார்ப்பணம்

தென்மராட்சி,ஜூலை12

மந்துவில் மேற்கு மகளிர் கிராமிய அபிவிருத்திச் சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மந்துவில் சூரியகுமாரன் சனசமூக நிலையத்தில் தென்மராட்சி பிரதேச கிராமிய அபிவிருத்தி அலுவலர் இ. பரராசசேகரம் தலைமையில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் சங்கத்திற்கான புதிய நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டனர். (எ-17)

### இரத்தினபுரியில் வெள்ள அபாயம்!

கொழும்பு,ஜூலை12

இரத்தினபுரியில் மீண்டும் வெள்ள அபாயம் ஏற்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றுமுன்தினம் பெய்த கடும் மழைகாரணமாக களுகங்கையில் தண்ணீர் மட்டம் 16 அடியாக உயர்ந்துள்ளது. இன்னும் இரண்டு அடி உயர்ந்தால் இரத்தினபுரி மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கிவிடும்.

நேற்றுமுன்தினம் தொடர்ச்சியாக 12 மணித்தியாலம் கடும் மழை பெய்ததலால் பலாவெல, குருவிட்ட, அவிசாவளை போன்ற பகுதிகளில் ஆங்காங்கே சில இடங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

தொடர்ந்து மழைபெய்தால் அநேக பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்படும்.

களுகங்கையில் நீர் பெருக்கெடுத்திருப்பதால் களுத்துறை வரையிலான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கிவிடும் என அஞ்சப்படுகிறது. (ம-4)

### காணிப் பிரச்சினை தொடர்பான கூட்டம்

அக்கரைப்பற்று,ஜூலை12

அம்பாறை மாவட்ட தமிழ், முஸ்லிம் மக்களின் காணிப்பிரச்சினைகள் தொடர்பான கூட்டம் நேற்றுமுன்தினம் காலை 10.15 மணியளவில் ஆலையடி வேம்பு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளான ரேர்ஜே ஹல்வோர்சன் பீற்றர் லேப், விடுதலைப் புலிகளின் தரப்பில் மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கௌசல்யன், அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் பாவா, நிர்வாகப் பொறுப்பாளர் நிவாராஜ், பொருண்மியப் பொறுப்பாளர் ஹென்றி உட்பட அ.சந்திரநேரு எம்.பி. ஆகியோரும் கலந்துகொண்டனர்.

முஸ்லிம் மக்கள் சார்பில் எம். ஐ.எம்.மொஹிடீன், ஐ.எம். இப்ராஹிம், எம். ஏ.நூஹூலெவ்வை, கரீம் மௌலானா ஆகியோரும். காணி ஆணையாளர் திணைக்கள அதிகாரிகள் இருவரும் கலந்துகொண்டனர்.

# மக்கள் சுதந்திரமாக நடமாடுவதற்காகவே கண்ணி அகற்ற எம்மை அர்ப்பணித்தோம்!

### மனிதநேய அமைப்பின் பயிற்றுவிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை12

எமது மக்களின் மீள்குடியமர்வையும் சுதந்திரமான நடமாட்டத்தையும் கருத்திற்கொண்டே நாம் எம்மை இக் கண்ணிவெடியகற்றும் பணிக்கு அர்ப்பணித்துள்ளோம்.

- இவ்வாறு மனிதநேயக் கண்ணிவெடியகற்றும் பிரிவின் பயிற்றுவிப்பாளர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

எமது மக்களின் வாழ்விடங்களிலும், விவசாய நிலங்களிலும் பெருமளவு மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன.

இதனால், மக்கள் மீள்குடியமர முடியாமலும் தமது வயல் நிலங்களில் விவசாயம் செய்யமுடியாமலும் உள்ளனர். அவர்களது மீள்குடியமர்வுக்கும், சுதந்திர நடமாட்டத்திற்கும் வழிசெய்யும் வகையிலேயே நாம் இப்பணிக்கு எம்மை அர்ப்பணித்துள்ளோம்.

1999ஆம் ஆண்டு நாம் இப்பணியை ஆரம்பித்தோம். குறைந்தளவு ஆளணியுடன் இப்பணியை மேற்கொண்டு வந்தோம். எதுவித பாதுகாப்போ, தொழில்நுட்ப உதவியோ இன்றி பலத்த உயிர் ஆபத்துக்களுக்கும் மத்தியில் நாம் பணியாற்றினோம். எனினும் அப்போது கூட பெருமளவு வெடிபொருள்களை நாம் அகற்றியுள்ளோம்.

இப்போது நிலைமை மாறியுள்ளது. எமது பாதுகாப்புக்கு நூற்றுக்கு நூறு வீதம் உத்தரவாதம் உள்ளது. பல தொழில்நுட்ப உதவிகளும் எமக்குக் கிடைத்துள்ளன. சர்வதேச தரத்திலான கண்ணிவெடி அகற்றும் நடைமுறைக்கு அமைவாக எமது கண்ணிவெடியகற்றும் அணிகளுக்குப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. பாதுகாப்பு அங்கிகள், உபகரணங்கள் என்பனவும் இப்போது எமக்கு கிடைத்துள்ளன. இதனால் ஒரு முழுத் திறமையும் வலுவும் வாய்ந்த கண்ணிவெடியகற்றும் பிரிவாக எம்மால் செயற்படக்கூடியதாகவுள்ளது. எதிர்காலத்தில் எமது நடவடிக்கைகள் மேலும் விஸ்தரிக்கப்படும் - என்றார் அவர். (ஒ-8)

# உடதலவின்னவில் கொலையுண்டோரின் குடும்பங்களுக்கு 10 காணித்துண்டுகள்

### அமைச்சர் தொண்டமான் யோசனைக்கு அங்கீகாரம்

கடந்த பொதுத்தேர்தலின்போது கண்டி, உடதலவின்னவில் கொலை செய்யப்பட்ட 10 முஸ்லிம் இளைஞர்களின் குடும்பங்களுக்கு 10 காணித் துண்டுகளை வழங்குவதற்கு கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் 10 பேர்ச்ஸ் வீதம் காணித் துண்டுகள் வழங்கப்பட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இக்கூட்டத்தில் இணக்கம் தெரிவித்திருக்கிறார்.

இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார்.

2001ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது அரசியல் வன்முறைகளில் கொல்லப்பட்ட ஏனையோரின் குடும்பங்களுக்கும் இவ்வாறே நிதி வழங்கப்பட வேண்டுமென்றும் ஜனாதிபதி அங்கு தெரிவித்திருக்கிறார்.

கண்டி மாவட்டத்தில் அவ்வாறானோர் இருந்தால் அவர்களின் பெயர் விவரங்களை சமர்ப்பிக்குமாறு அமைச்சர் தொண்டமான் அப்பொழுது ஜனாதிபதியைக் கேட்டுக்கொண்டார்.

அந்த விவரங்கள் வழங்கப்படுமென்று ஜனாதிபதி பதிலுக்குக் கூறியிருக்கிறார்.

## நாதஸ்வர விற்பன்னர்
# நலம்பெறப் பிரார்த்தனை

ஈழத்தின் பிரபல நாதஸ்வர விற்பன்னரும், எமது சமூகத்தின் மேம்பாட்டுக்குத் தன்னையே அர்ப்பணித்துச் செயற்பட்டு வருபவரும், எமது சங்க ஆலோசகருமான

## திரு. என்.கே.பத்மநாதன்

அவர்கள் சுகவீனம் அடைந்து கொழும்பு 'அப்பலோ' வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.
அவர் தனது பணிகளைத் தொடர நலம்பெறவேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.
மீண்டும் அவர் கானமழை பொழிய இறைவனை இறைஞ்சுகிறோம்.

அகில இலங்கை
இசை வேளாளர் சங்கம்,
*இணுவில் மேற்கு.* நாதஸ்வர, தவில் கலைஞர்கள்.

---

# 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 20 - 04 - 1949



இறப்பு 12 - 07 - 1989

## அமரர் மரியாம்பிள்ளை வில்லியம் ஜெயராஜா

(சில்லாலை)
(நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனிக்குளம்)

எங்கள் அன்புருவே!
ஆறாது எம் துயரம்
இப்புவியில் நாம் இருக்கும் வரை!

என்றும் உங்கள் நினைவுடன்:
மனைவி, மகள், தாய், சகோதரர்கள், மாமன், உறவினர்கள்.

*891, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.* (20160) (25-12-17-14-16)

---

## "WE ARE GOING" PARTY தொடர்பானது

கலைப்பீட 4 ஆம் வருட மாணவர்களின் 'WE ARE GOING' PARTY எதிர்வரும் திங்கட்கிழமை (14.07.2003) காலை 9.00 மணிக்கு STUDENTS COMPLEX இல் நடைபெறும் என்பதனை அறியத் தருகின்றோம்.

4 ஆம் வருடம்,
கலைப்பீடம்,
யாழ்.பல்கலைக் கழகம். (20155) (12-13-14-16)

- ஏற்பாட்டுக்குழு.

---

## பட்டப்பகலில் நகைகள் திருட்டு

சண்டிலிப்பாய்,ஜூலை12

வடலியடைப்பு கலைவாணி வீதியிலுள்ள ஆசிரியை ஒருவரின் வீட்டில் பகல் நேரத்தில் 50 பவுண் நகைகள் திருட்டுப் போயுள்ளன. மேற்படி ஆசிரியை கடந்த மூன்றாம் திகதி நண்பகல் 12 மணியளவில் தொல்புரம் வழக்கம்பரை அம்மன் கோயிலில் நடைபெற்றுவரும் வருடாந்த உற்சவத்திற்கு புறப்பட்டு சென்றதாகவும் - அத்தருணம் பார்த்து திருடர்கள் பின்பக்க அறைக்கதவை திறந்து உள்ளே சென்று அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த ஐம்பது பவுண் நகைகளை திருடிச்சென்றுவிட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

(ஒ-135)

---

### தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கான ஆசிரியர் P. அம்பிகைபாகனின் பௌர்ணமிக் கருத்தரங்கு

காலம்:- 13-07-2003
காலை 10.00-மாலை 3.00மணி வரை
இடம்:- JAFFNA CENTRAL COLLEGE
அனுமதி: (இலவசம்) ஆசிரியரின் மாதிரிப் பரீட்சைத்தாள்கள் பெறும் பாடசாலை மாணவர்களுக்கு மாத்திரம்
(C/28911) (28-12-17)

---

# IELTS

**INTERNATIONAL ENGLISH LANGUAGE TESTING SYSTEM**

AFTER WORK | AFTER SCHOOL

60 மணித்தியாலங்கள் உள்ளடக்கிய பாடநெறி "ACADEMIC" வினாத்தாளை எடுக்கவிரும்பிய மாணவர்களுக்கு

- ★ தனிப்பட்ட கவனிப்புடன் கூடிய பாடநெறி.
- ★ பரீட்சைக்குத் தேவையான ஆலோசனைகளுடன் பயிற்சிப்பரீட்சைகள்.
- ★ புதிய கேம்பிறிட்ஜ் Modules ஒலிப்பேழைகளுடன் கூடிய சுய Access உபகரணங்கள்.

கல்வி-தொழில் செய்ய வெளிநாடு செல்வதற்கு விசா பெற இந்தக் கல்விமுறை அவசியமானது.

*தொடர்பு:-* இணைப்பாளர்
90, குறுக்குத்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

---

## வடகோவை
## ஸ்ரீ-சித்திரவேலாயுத சுவாமி கோயில் தர்ம பரிபாலன சபை
## அறிவித்தல்

நாளை 13.07.2003 ஞாயிறு பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறவிருந்த விசேட மகா சபைக் கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டு மேற்படி கூட்டம் எதிர்வரும் 20.07.2003 ஞாயிறு பிற்பகல் 3.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் ஏற்கனவே தங்களுக்கு கிடைத்த கூட்ட நிகழ்ச்சி நிரலின்படி நடைபெறும் என்பதைத் தயவுடன் அறியத்தருகின்றேன்.

குறிப்பு:- இதுவரை தமது அங்கத்துவத்தைப் புதுப்பிக்காத மகாசபை அங்கத்தவர்கள் ஆண்டுச் சந்தா ரூபா 60/- ஐச் செலுத்தி 20.07.2003இற்கு முன்பு புதுப்பித்துக் கொள்ளவும்.

ஆலய பரிபாலன சபை சார்பில்
ஐ.சிவலோகநாதன்(செயலாளர்)

(20163) (25-13-17-14-16)

---

# தேவை

ஓவியவேலை, பிளாஸ்ரிக் வேலை பயில விரும்புபவர்களும், உதவியாளர்களும் தேவை. கல்வியறிவு தேவை இல்லை. பயிற்சிக் காலத்தில் ரூபா 2,000/- வழங்கப்படும். பகுதி நேர வேலை வாய்ப்புக்களும் உண்டு. இன்று (12.07.2003) சனிக்கிழமை ஆண், பெண் (இருபாலாரும்) நேரில் வரவும்.

யசோ ஆட்ஸ்,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(20161) (25-13-17-14-16)

---

# மரண அறிவித்தல்

## திருமதி வைரவி சோதிப்பிள்ளை

திக்கம்புரை, வயாவிளானைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கு, கட்டைப்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வைரவி சோதிப்பிள்ளை அவர்கள் 11-07-2003 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரவியின் அன்பு மனைவியும் இராசம்மா, கதிரவேலு, மகாலிங்கம், சரஸ்வதி, தவராஜா, ஆனந்தராஜா, செல்வலிங்கம், முகிலன் ஆகியோரின் அன்புத் தாயாரும் கோவிந்து, மனோன்மணி, புஸ்பலதா, தேவராஜா, சுதந்திரா, ஜெயராணி, வாசுகி ஆகியோரின் அன்பு மாமியாரும் மாணிக்கம், சாமியார் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கிட்டிணர், காலஞ்சென்ற செல்லம்மா ஆகியோரின் அருமை மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.07.2003) சனிக்கிழமை முற்பகல் 11.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி பாற்பண்ணை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*(வயாவிளான்)*
*விளையாட்டரங்க வீதி,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*

தகவல்:
வ.கதிரவேலு
(மகன்)

(20150-12-14-16-17)

---

உ

# ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபம்
# திறப்பு விழா



## சைவத் தமிழ்மக்களுக்கு இம்மண்டபம் காணிக்கை

எல்லாம்வல்ல ஆவரங்கால் ஸ்ரீ பர்வதவர்த்தனி சமேத நடராஜ ராமலிங்கேஸ்வரர் திருவருளை முன்னிட்டு வாழும் நாம் எம் குடும்பத்தவர்களின் அர்ப்பணமாக சிவசக்தி மணிமண்டபத்தை உருவாக்கியுள்ளோம். உழுது பயிர்செய்து உபவாசம் இருந்து, வணங்கி எம்மை வளர்த்து ஆளாக்கிய எந்தையும் தாயும் இருந்து குலாவிய எம் திருவூரில் பலருக்கும் பயன்தரக்கூடிய பணியினை இறைவன் எமக்குப் பணித்தான். வீழ்ந்து தவழ்ந்து விளையாடி ஆடிப்பாடி மகிழ்ந்த எம் ஆவரங்கால் பூமியில் அரும்பணி செய்ய அம்மான் தந்த கடாட்சத்தை நினைத்து அகமகிழ்ந்து வணங்குகிறோம். கடல் கடந்து வாழ்ந்த போதிலும் எம் அகக் கண்ணில் ஆவரங்கால் திருவூர் என்றும் நிதர்சனமாகத் தென்படும் எங்கள் குல தெய்வத்தின் திருவருளே எமது வாழ்வு. கல்வி தந்த கலைக்கூடமான ஆவரங்கால் இராமலிங்க வித்தியாலயமும், புத்தூர் சோமஸ்கந்த கல்லூரியும் என்றும் எம் நன்றிக்குரிய அறிவாலயங்கள். எம்மை வாழ்த்தி வளர்த்த உற்றார், உறவினர், ஊரவர் தந்த அன்புக்கு என்றும் யாம் நன்றிக்கடன்பட்டவர்கள். இன்று யாம் வாழும் இங்கிலாந்து தேசத்திலும் இறையருளும் இனிய மனிதர்களின் நட்பும் எம்மை நன்றே வாழ்விக்கிறது.

நல்லோர் பலரின் நல்வாசியால் நன்மைகள் பல பெற்ற யாம், இப்புனித கைங்கரியத்தை நிறைவுசெய்ய வழிகோலியது. இத்திருப்பணி நிறைவேற உழைத்தவர்கள் பலர். நாம் என்றும் பெருமதிப்போடு எம் வழிகாட்டியாகக் கருதும் செஞ்சொற்செல்வர் திரு.ஆறு.திருமுருகன் அவர்களிடம் எமது ஊரில் நிரந்தரமான திருப்பணி ஒன்றை நிறைவேற்ற வேண்டும் என வேண்டினோம். அவர் எல்லை மிகுந்த உற்சாகமூட்டி ஒரு வருட காலத்துக்குள் இப்பெரிய கைங்கரியம் நிறைவேற உழைத்தார். எங்கள் மணிமண்டபத்துக்கு அடிக்கல் நாட்டியது முதல் இன்று வரை இப்பணி நிறைவேற அவர் ஆற்றிய பல தொண்டுக்கு யாம் என்றும் நன்றிக்கடன் பட்டவர்கள். எங்கள் கிராமத்து அன்பர்கள், உறவினர்கள் இப்பணி நிறைவேற பூரண ஒத்துழைப்பு வழங்கினார்கள்.

எமது V&T அறக்கட்டளையின் "சிவசக்தி மணிமண்டபம்" ஆன்மீக விழாக்கள், மணவிழாக்கள், கலாசார நிகழ்ச்சிகள், அறிவியல் வைபவங்களுக்கு பயன்படுத்தப்பட்டு காலம் காலமாகப் புனிதமாகப் பேணப்பட எல்லோரும் துணைசெய்யவேண்டும் என வேண்டி இறைவனைப் பிரார்த்தித்து நிறைவு செய்கிறேன்.

### இவர்களுக்கு சமர்ப்பணம்

எம்மை வாழ்வித்த அன்னையும் பிதாவும்



ஸ்ரீமான்
வல்லிபுரம் வேலுப்பிள்ளை



திருமதி
தெய்வானை வேலுப்பிள்ளை

உடன்பிறந்த சகோதரி



திருமதி
காசிப்பிள்ளை தம்பிநாதர்

### சிவசக்தி மணிமண்டப ஸ்தாபகர்



வே.சிவசுந்தரம் - அருளேஸ்வரி தம்பதிகள்
(அறங்காவலர் V&T ரஸ்ட்)

இன்று (12.07.2003) சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி திறந்துவைப்பார்.

(28916) (22-12-07-14-16)

வருடாந்த உற்சவ காலத்தில்

# நல்லூரில் சீர்கேடுகளைத் தடுப்பதற்கு புலிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்!

## மாநகரசபைக் கூட்டத்தில் ஏகமனதாக வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஜூலை12

நல்லூர் உற்சவ காலத்தில் ஆலயச் சூழலில் ஏற்படக்கூடிய சீர்கேடுகளைத் தடுப்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் நடவடிக்கை எடுப்பதோடு, அது தொடர்பான அறிக்கை ஒன்றினையும் வெளியிடவேண்டும்.

- இவ்வாறு நல்லூர் ஆலய உற்சவகால ஏற்பாடுகள் குறித்து நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் வேண்டுகோள் விடப்பட்டது.

நல்லூர் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் யாழ். மாநகர ஆணையாளர் இ.இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்திலேயே இது தொடர்பான வேண்டுகோள் ஏகமனதாக முன்வைக்கப்பட்டது.

கடந்த சில வருடங்களாக நல்லூர் ஆலய உற்சவ காலங்களில் பல்வேறு வகையான சீர்கேடுகள் இடம்பெற்றுள்ளன. அது மட்டுமல்லாது உற்சவ காலங்களில் பூசைகள் நிறைவடைந்ததும் இரவு வேளைகளில் மோட்டார் சைக்கிளில் குழுக்களாக வரும் இளைஞர் குழுக்கள் ஆலயத்திற்கு வருகைதரும் அடியார்களுக்கு இடையூறு விளைவிக்கும் வேண்டத்தகாத பல செயல்களில் ஈடுபட்டனர்.

இத்தகைய செயற்பாடுகள் இம்முறையும் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனைத் தடுக்கும் முன்னேற்பாடாக விடுதலைப் புலிகள் அறிக்கை ஒன்றை வெளியிடுவதோடு, அவற்றைத் தடுக்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வேண்டுகோள் விடுவதென ஏகமனதாகக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

★ கடந்த வருடங்களைப் போல இம்முறையும் வீதித் தடைகள் ஏற்படுத்தப்படும். ஒரு வீதித் தடையில் தொண்டர் படை அணிகளும் மற்றும் ய[illegible] மாநகரசபை ஊழியர் ஒருவ[illegible], பொலீஸார் இருவரும் சேவையில் ஈடுபடுத்தப்படுவர்.

★ அதிகாலை 4 மணிமுதல் நணபகல் 12 மணிவரையும், பிற்பகல் 2 மணிமுதல் இரவு 9 மணி வரையும் வீதித் தடைபோடப்பட்டு வாகனப் போக்குவரத்து தடைசெய்யப்படும். இப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களின் நலன்கருதி இந்த வீதித் தடைகள் நண்பகல் 12 மணிக்கு அகற்றப்பட்டு மீண்டும் 2 மணிக்கு மூடப்படும்.

★ ஆலய சுற்றுச் சூழல்களில் வீதித் தடைகளுக்குள் வசிக்கும் மகளுக்கும், வர்த்தகர்களுக்கும் விசேட 'பாஸ்' வழங்கப்படும்.

★ இதேவேளை இப்பகுதிக்குள் வாழும் மக்களின் வாகனங்கள் யாவும் பதிவு செய்யப்பட்டு - வாகன உரிமையாளர்கள் மட்டும் வீதித் தடை ஊடாக வாகனங்களைக் கொண்டுசெல்ல அனுமதி வழங்கப்படும்.

★ ஆலயப் பகுதியில் நடமாடும் வியாபாரங்களில் ஈடுபட தடைவிதிக்கப்படும். அதனை மீறி ஈடுபடுபவர்கள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர்.

★ தற்காலிக பொலீஸ் நிலையம், மலசல கூடங்கள், வர்த்தக நிலையங்கள் மற்றும் அவசர சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்படும்.

இவ்வாலோசனைக்கூட்டத்தில் வடபிராந்திய போக்குவரத்துச் சபை அதிகாரிகள், இலங்கை மின்சார சபை அதிகாரிகள், தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஒ-5)

# கைதடிப் பகுதிக்கான பஸ்சேவைகள் சீரில்லை

## அப்பிரதேச மக்கள் முறைப்பாடு

கைதடிப் பிரதேசத்திற்கான வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் பஸ்சேவைகள் சீராக இல்லையென அப்பகுதி மக்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பகுதிக்கான சேவையில் ஈடுபடும் பஸ் அடிக்கடி பழுதடைவதோடு, சிலவேளைகளில் வேறு இடங்களுக்கும் சேவையில் ஈடுபடுவதற்காக அனுப்பப்படுகின்றது.

கடந்த புதன், வியாழன் ஆகிய நாள்களிலும் இப்பிரதேசத்திற்கான காலைச்சேவை இடம்பெறவில்லை. இதனால் நகரப் பாடசாலைகளுக்கு கல்வி கற்பதற்கும், கடமைக்குச் செல்வதற்காகவும் நின்ற மாணவர்களும் ஊழியர்களும் ஏமாற்றத்துடன் வீடு திரும்பியுள்ளனர். இப்படியான சம்பவங்கள் தொடர்ந்து பல நாள்களாக இடம்பெற்றுவருகின்றன.

எனவே, இனியாவது இப்பகுதிக்கான சேவையை நாள் தவறாமல் வழங்க ஆவனசெய்யவேண்டும் என இப்பகுதி மக்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-75)


**தர்மசாஸ்தா குருகுலத்தில் உபாகர்மம்**

ஆனிமாதம் 29ஆம் திகதி நாளை (13.07.2003)

ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும்.

பஞ்சபாத்ரம் கொண்டு வரவும்.

**பிரம்மஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள்**

காயத்ரீபீடம், இணுவில்.

(20143) (22-25-13-15)


# தொழிற்சங்கச் சேவையில் அரும்பணியாற்றும் மகாசிவம்

**இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் பதவியில் த. மகாசிவம் 25ஆவது ஆண்டாக நீடிக்கிறார். அதனையொட்டி மேற்படி சங்கத்தின் பிரசாரப்பிரிவு வெளியிட்டுள்ள குறிப்பு இங்கு பிரசுரமாகிறது.**

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவத்தின், பொதுச்செயலாளர் பதவியின் 25ஆவது வருட ஆரம்பம் கடந்த வியாழக்கிழமையாகும். தொழிற்சங்கச் சேவையில் 33வருட காலமாக ஈடுபட்டுவரும் த.மகாசிவம ஒரு முதலாந்தர அதிபராவார்.

தெல்லிப்பழை, வர்த்தலைவிளானைப் பிறப்பிடமாகக் கொண்ட த.மகாசிவம் 1979ஜூலை 10ஆம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற தேர்தலில் பொதுச் செயலாளராக தெரிவுசெய்யப்பட்டார்.

தொடர்ந்து வந்த அத்தனை தேர்தல்களிலும் அவர் தனது பொதுச் செயலர் பதவியைத் தக்க வைத்துக் கொண்டார். இறுதியாக 2001ஆம் ஆண்டு திருமலையில் நடைபெற்ற தேர்தலிலும் வெற்றிபெற்று செயலாளரானார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தை இலங்கையிலுள்ள 22ஆசிரியர் தொழிற்சங்கங்களுக்குள் முதன்மை ஸ்தானத்துக்கு உயர்த்தி, சர்வதேச கல்வியகத்துடன்(EI) இணைத்து இலங்கை நிலையியற்குழுவில் (Standing Committee) அங்கம்வகிக்க வைத்த பெருமை தமகாசிவத்தையே சாரும்.

**வி.ரி.சகாதேவராஜா,**
**பிரசார செயலர்,**
**இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம்**

ஒரேநேரத்தில் வடக்கு - கிழக்கில் அத்தனை பாடசாலைகளையும் ஸ்தம்பிதமடையச்செய்யும் வல்லமை தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கு உள்ளது. தமிழ் ஆசிரியர்கள் மட்டுமல்லாமல் இஸ்லாமிய, சிங்கள ஆசிரியர்களும் மகாசிவத்தை அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளும்நிலை உருவாகியுள்ளது.

மகாசிவம் ஒரு தாவர போசனையாளர். அவர் பல இன்னல்களைத் தாண்டி, பல சவால்களுக்கு முகம் கொடுத்த ஒரு பொதுச் செயலாளர்.

வடக்கு - கிழக்கில் 1000 தொண்டர் ஆசிரியர்கள், 193சிங்கள மொழி மூல ஆசிரியர்கள் தெரிவானமை, ஆயிரம் உயர்தர ஆசிரியர்கள் மற்றும் வடக்கு - கிழக்கிற்கு வெளியே ஆயிரத்து ஐந்நூறு தமிழ்மொழிமூல ஆசிரியர் நியமனத்திற்கு வர்த்தமானி அறிவித்தல் கோரப்படவுள்ளமை, சம்பள நிலுவைகள் பெற்றமை, வடக்கு - கிழக்கில் சம்மேளனம் உருவாக்க முயற்சி செய்தமை, தேக்கநிலை சம்பளம் 1997இலிருந்து பெற உதவியமை போன்ற பல செயற்பாடுகள் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் அயராத முயற்சியினால் கிடைக்கப்பெற்றவை என்றால் மிகையல்ல.

இறுதியாக, இன்னும் 3ஆயிரம் ஆசிரியர்களை வடக்கு - கிழக்கில் நியமிக்க உலக வங்கியின் அங்கீகாரத்தை மகாசிவம் பெற்றுக்கொடுத்துள்ளார்.

அவரது 25ஆவது வருட செயலாளர் வாழ்வு வளம்பெற வாழ்த்துகிறது தமிழ் ஆசிரியர் சமூகம்.

## கருத்தரங்குகள்

கொழும்புத்துறை,ஜூலை12

"சிறுவர் மேம்பாட்டில் பங்கு கொள்ளல்" என்னும் கருப்பொருளில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு அகவொளி நிலையத்தில் முழுநிலா நாள் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

சிறுவர் பாதுகாப்புக் குழுவின் மாவட்ட இணைப்பாளர் ஸ்டீபன் ராஜ் இக்கருத்தரங்கில் உரை நிகழ்த்தவுள்ளார் என அகவொளி இயக்குநர் அருட்திரு. றெஜி ராஜநாயகம் அடிகள் தெரிவித்துள்ளார். (ஒ-30)

★ ★ ★

கொழும்புத்துறை,ஜூலை12

இலவச அழகுக்கலை தொடர்பான கருத்தரங்குகள் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.

ஆண், பெண் இருபாலருக்குமான இக்கருத்தரங்கு இன்று காலை 10 மணிக்கு கரவெட்டி திருஇருதயக் கல்லூரியிலும் நாளை காலை 10 மணிக்கு யாழ்பல நோ.கூ.சங்கக் கேட்போர்கூடத்திலும் இடம்பெறும்.(ஒ-30)

## கட்டணம் செலுத்தாத மின் இணைப்புகள் துண்டிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை12

இலங்கை மின்சாரசபையின் வட்டுக்கோட்டை உபஅலுவலகப் பகுதியில் நீண்டகாலமாக மின் கட்டணங்களைச் செலுத்தாதவர்களின் மின் விநியோகம் விரைவில் துண்டிக்கப்படவுள்ளதாக மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மின்கட்டண நிலுவையாக 2 ஆயிரம் ரூபாவுக்கு மேல் உள்ளவர்களின் மின்விநியோகமே இவ்வாறு துண்டிக்கப்படவுள்ளது. (ஒ-10-135)




**சிவாச்சார்ய அபிஷேக அழைப்பு**

*பேரன்புடையீர்!*

*ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான சுபானு வருடம் ஆனி மாதம் 29ஆம் நாள் (13.07.2003) ஞாயிற்றுக்கிழமை பூராட நட்சத்திரமும் பௌர்ணமி திதியும் சுக்கிர ஓரையும் இணையும் காலை 6.10 மணிமுதல் 6.45 மணிவரையுள்ள கர்க்கடக லக்கின திவ்ய முகூர்த்தத்தில்*

புத்தூர் அண்ணாச்சாமிக்குருக்கள்
அவர்களின் பௌத்திரனும்
பாலசுப்பிரமணியக் குருக்கள்
அவர்களின் ஏகபுத்திரனுமாகிய
*பிரம்மஸ்ரீ பா. பாலகுமாரசர்மா* அவர்களுக்கு
(வட்டு. விசாலாட்சி அம்பாள் சமேத விசுவநாதர் தேவஸ்தான குரு)

*விசேட தீட்சை. நிர்வாண தீட்சை. ஆச்சாரிய அபிஷேகம்(குரு பட்டாபிஷேகம்) நிகழ்த்த சாவகச்சேரி. விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகப் பெருமானின் திருவருளும் குருவருளும் கைகூடியிருப்பதால் வட்டு. சிவன் தேவஸ்தான மண்டபத்தில் நடைபெறும் நிகழ்வில் எமது உற்றார். உறவினர் அனைவரும் தங்கள் பந்துமித்திர சகிதம் வருகைதந்து குரு ஆசிபெற்று நல்லாசியுடன் திருவருட் பிரசாதமும் பெற்று சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

*தீட்சாகுரு:-* சித்தாந்த பண்டிதர் சிவாகமவித்.பத்மஜோதி
சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள்
(சாவகச்சேரி) (நல்லை ஆதீன சிவாச்சாரியார்)

*இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:*
திருமதி [illegible] பாலசுப்பிரமணியக் குருக்கள் ஜானகி,
சிவஸ்ரீ சாமி. சோமசுந்தரக்குருக்கள் (புத்தூர்)
*சிவன்கோயிலடி, வட்டுக்கோட்டை.*

(20150) (22-13-15)



**பாராட்டி வாழ்த்துகின்றோம்!**



ஓய்வுபெற்ற மக்கள் வங்கியின்
பிரதி முகாமையாளரும்,
சுதுமலை ஈஞ்சடி ஞானவைரவர்
தேவஸ்தானத்தின் முன்னாள் பொருளாளரும்,
வழிபடுவோர் சங்க உறுப்பினரும்
பல சமய, சமூக நிறுவனங்களின் உறுப்பினரும்
சுதுமலை வடக்கைச் சேர்ந்தவருமாகிய

**உயர்திரு.**
**சதாசிவம் தம்பித்துரை**

அவர்கள் மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் 09.07.2003இல் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமையையிட்டு அவரைப் பாராட்டுவதோடு, அவரது சமூகப் பணி மேன்மேலும் சிறக்க இறைவனை வேண்டி வாழ்த்துகிறோம்.

தர்மகர்த்தா சபை,
சுதுமலை ஈஞ்சடி ஞானவைரவர் தேவஸ்தானமும்
ஈஞ்சடி வாழ் மக்களும்.

(20112) (22-13-15)



**அர்ப்பண வாழ்வில் பொன் விழாக்காணும் அருட்சகோதரியை வாழ்த்துகின்றோம்**



அர்ப்பண வாழ்வில் ஐம்பது வருடங்கள்
இறைபணியிலும் அன்புப் பணியிலும்
அர்ப்பணித்து அருட்சகோதரியாய்,
அன்னையாய் இன்றும் பணியாற்றி
பொன்விழாக் காணும் அன்புநிறை

**அருட்சகோதரி**
**கபிரியேல்பிள்ளை பிறிஜிற்**

அவர்களை அன்புடன் வாழ்த்துகின்றோம்.

பங்குத் தந்தையும்
பங்கு மக்களும்,
புனித அன்னாள் ஆலயம்,
இளவாலை.

(20140) (22-25-13-15)



**கண்ணீர் அஞ்சலி**

எம்முடன் கடமைபுரியும் குடும்ப நல உத்தியோகத்தர்
செல்வி செ.சுபாஜினி அவர்களின் அன்புத் தந்தையார்

**செல்வரட்ணம்**

அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

குடும்பநல உத்தியோகத்தர்கள்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(20148) (22-21-26-13)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

1½வயதுடைய கறுப்புநிற டோமன் ஞ்ச்ர்(Doman Pincher) பெண்நாய விற்பனைக்குண்டு. தொடர்பு: 70, மானிப் பாய் வீதி, யாழ்ப்பாணம். (20086)

African Love Birds, Finches, Jawa, Sparraws போன்ற அழகிய சிறு பறவைகளும் Fan Tail புறாக் களும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- மனோன் மாஸ்ரர், அரசடி, நவாலி தெற்கு, மானிப்பாய்.(20128)

செவ்வரத்தை (அடுக்கு மஞ்சல்), முசந்தாஸ், அடுக்கு நந்தியாவெட்டை, எவகிறீன், மஞ்சல் கொடிப்பூ, ஈரப்பலா, எப்போஞ்பிளவர், முத்துப் பூ ஆகிய கன்றுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 152/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம் (I.C.R.Cஇற்கு அண்மையில்). (20145)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

நல்ல இன நாய்க்குட்டிகள் குறைந்த விலையில் விற்பனைக் குண்டு. தொடர்பு: தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்தி ரைச் சந்தையடி, நல்லூர். (20043)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima, Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் உடனுக்குடன் ... (Electronic முறை). (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (20044)

புறொயிலர் 1Kg 140/= சுத்தம் செய்தல் இலவசம். தொடர்பு:- 1) மான்ஸ் பாடசாலை வீதி, டச் றோட், உடுவில். 2) மீன் சந்தை முன்பாக, சுன்னாகம். (19998)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima, Broiler குஞ் சுகள் 17.07.2003 பிற்பகல் விநி யோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும். (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத் திரைச்சந்தையடி, நல்லூர். (20042)

பிறிமா, Broiler குஞ்சு விலை குறைக்கப்பட்டுள்ளது. 16.07.2003 இற்கு முன் பதிவுசெய்யவும். தன பாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென் ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (20144)

## தவறிவிட்டது

09.07.2003 புதன்கிழமை சாவகச் சேரிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் பஸ்ஸில் நெக்லஸ் ஒன்று தவறிவிட்டது. தயவுசெய்து கண் டெடுத்தவர்கள் V.றெஜி, R.C. சேச் லேன், கச்சாய் றோட், சாவகச்சேரி எனும் முகவரியில் ஒப்படைத்துதவ வும். T.P. - 0777 - 834525. (சன் மானம் வழங்கப்படும்). (20108)

கட்டுடை, மானிப்பாயைச் சேர்ந்த தருமராசா நகுலேஸ்வரி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 837661501V), விசேட அடையாள அட்டை என்பன மானிப் பாய்க்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டன. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் தவராசா தவமணி, ஐந்துகண்மதவடி, சண்டிலிப்பாய் எனும் முகவரியில் ஒப்படைத்துதவ வும். (20095)

திருகோணமலையைச் சேர்ந்த தெய்வேந்திரன் டிலோஜன் என்ப வருடைய விசேட அடையாள அட் டையும், பேர்ஸ்ஸும் யாழ்நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து I.I.S. நிறுவனம், 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக் கவும். (20118)

## இலக்கிய விமர்சனம்

"நாகம்மாள்" நாவலுக்கும் "கோடை" நாடகத்திற்கும் விளக் கமும் விமர்சனமும் எழுதியுள்ளார் - எல்லா வகை இலக்கியங்களும் படைத்த கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை மற்றும் 1. தமி ழில் இலக்கிய விமர்சனம் 2. செய் யுளும் உரைநடையும். ரூபா 40/=. (20137)

## வீடு வாடகைக்கு

யாழ்.செண். பற்றிக்ஸ் வீதியில் பிரதான வீதிக்கு அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய மாடிவீடு வாட கைக்கு உண்டு. அலுவலகங்கள் நடத்துவதற்கு ஏற்றது. தொடர்பு இல.7, செண். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம். T.P. 222-5957. (20084)

## மணமகள் தேவை

1970 ஆம் ஆண்டு பிறந்த, யாழ் கிறிஸ்தவ வேளாள குடும்பத்தைச் சேர்ந்த, 12 வருடம் ஜேர்மனியில் வசித்து நாடு திரும்பியுள்ள ஆண்ட வரை ஏற்றுக்கொண்ட மணமகனுக்கு ஆண்டவரால் இரட்சிக்கப்பட்ட மண மகள் தேவை. படம், குடும்ப விவ ரத்துடன் விண்ணப்பிக்கவும். பொருத்த மற்றவை திருப்பி அனுப்பப்படும். தொடர்பு- விளம்பர இல. 1950, மே/பா உதயன். (20089)

## காணி தேவை

இளம் குடும்பமொன்று யாழ். பிரதேசத்தில் மீளக்குடியமர்வதற்கு 4 பரப்புக் காணி தேவைப்படுகின் றது. காணி யாழ். - பலாலி வீதிக்கு அருகில், திருநெல்வேலிச் சந் திக்கு அப்பால் விரும்பத்தக்கது. விற்க விரும்புபவர்கள் நேரில் தொடர்புகொள்ளவும். இடைத் தரகர்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டார்கள். தொடர்புகளுக்கு: T.P.No. 0041318692443 (21-19-14-18-15) (19874)

## லயன்ஸ் கழகம் - அச்சுவேலி வட்டம்

We Serve

## அதிர்ஷ்டலாபச் சீட்டு

| | |
|---|---|
| முதலாவது பரிசு: | 2498 |
| இரண்டாவது பரிசு: | 5457 |
| மூன்றாவது பரிசு: | 1072 |

ஆறுதல் பரிசில்கள் - 11

| | | | |
|---|---|---|---|
| 421 | 3563 | 5422 | 1931 |
| 3292 | 2480 | 1263 | 3853 |
| 1205 | 108 | 3769 | |

பரிசில்கள் 27.07.2003 அன்று வழங்கப்படும்.

Dr.சீ.இராஜலிங்கம்
தலைவர்,
சர்வதேச லயன்ஸ் கழகம்,
அச்சுவேலி வட்டம்.

(20111)(21-15-19)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில் 18 - 04 - 1951

இறைவன் அடியில் 12 - 06 - 2003

### அமரர் சிவஞானம் மனோகரன்

அன்போடு பழகி பண்போடு வாழ்ந்த உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


இன்று (12.07.2003) சனிக்கிழமை எமதில்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*முருகமூர்த்தி வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

- குடும்பத்தினர்.

(20134) (21-26-13-19)

## ஓராண்டு நினைவலைகள்



மலர்வு 1976 - 08 - 14

உதிர்வு 2002 - 06 - 23

### அமரர் மகேஸ்வரன் மங்களேஸ்வரன்

(யாழ். பல்கலைக்கழக மூன்றாம் வருட மாணவன்)

திதி:-12.07.2003

அன்பின் இலக்கணமே ஆறுதலின் சிகரமே
ஆறாத்துயரில் நாம் வாழ மீளாத் துயில் கொண்டீரோ?
ஆண்டொன்று ஆனாலும் அழியாது உன்நினைவு
ஆறாது எம் இதய வேதனைகள் - அன்போடு
அரவணைக்க மீண்டும் வாராயோ எம் துயர் தீர்க்க.
இனிய வாழ்வின் தீபமாய் ஒளிவீசிப் பிரகாசித்த
எமது அன்புள்ளம் சாந்தி பெற ஆண்டவனை
வேண்டுகிறோம்.

*சூராவத்தை,*
*சுன்னாகம்.*

(20064)(21-13-19)

அம்மா, அப்பா, தம்பிமார்.

## எட்டாம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 10 - 08 - 1917

விண்ணில் 11 - 07 - 1995

### திருமதி ஐயாத்துரை பவளம்

திதி:சதுர்த்தசி 12.07.2003

பொங்கிவரும் பெருநிலவாய், புன்னகையின் இருப்பிடமாய்,
மங்காத ஒளிவிளக்காய் எங்கும் பிரகாசித்த அன்னையே!
இங்கு எட்டாண்டு கடந்தும் உன்நினைவு
மறக்க முடியவில்லையே!
எங்கு பார்த்தாலும் உன்திருமுகமே தெரியுதம்மா!

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*பிரதான வீதி,*
*சங்கானை.* (20092)(21-15-19-26)




## மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

உங்களுக்குத் தேவையான சகலவிதமான புத்தகங்களும் ஒரே கூரையின்கீழ் பெற்றுக்கொள்ள 'புத்தகக் கடல்'. 10% - 50% கழிவு வழங்கப்படும். ஒரு சில மருத்துவ, பொறியியல், கணனி புத்தகங்கள், ஆங்கிலம் கற்றுக்கொள்ள பாடசாலை மாணவர்களுக்கான ஒரு சில புத்தகங்களும், உபகரணங்களும் ரூபா 10 - ரூபா 100 வரை பெற்றுக்கொள்ளலாம். இவை தவிர, பாடசாலை அலுவலக உபகரணங்களும் பாடசாலை அழிபொருள்கள், மூலப்பொருள்களும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலைகளுக்கு இலவச விநியோகம். உங்கள் தேவை எதுவானாலும் பூர்த்திசெய்ய தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:-

### ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

*இல. 212, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.* T.P.021-222 5542

(20764) (26-24-12-14-21-13-19)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பிரபல வணிகரும், சைவசமய அபிமானியும் ஆலயத் திருப்பணி வேலைகளை திறம்பட நிறைவேற்றுவதில் முன்னின்று உழைப்பவருமான
ஊர்காவற்றுறை - புளியங்கூடல் மைந்தன்
**உயர்திரு. குமாரசாமி கங்கைவேணியன்**
அவர்கள்
சமாதான நீதிவானாகப் பதவியேற்றிருப்பதை அடுத்து அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

*திர்ஷிகா கலைக்கூடம்,*
*அரசடி லேன்,*
*திருநெல்வேலி கிழக்கு.*

சிற்பகலாவாரிதி
ந.சற்குருநாதன் (குரு) ஆச்சாரியார்.

(C/28928) (30-14-16-29)

## திருமண வாழ்த்துக்கள்

10.07.2003 நேற்றுமுன்தினம் திருமணவாழ்வில் இணைந்துகொண்ட மட்டுவில் தெற்கைச்சேர்ந்த
**திரு.திருமதி பிரபாகரன் அமுதா**
**திரு.திருமதி குகேந்திரன் ஜெயந்தினி**
தம்பதிகளை பதினாறும் பெற்று பல்லாண்டு காலம் சீருஞ்சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

நிர்வாகி
*மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.* (SANTHOSH - PCS)

(30-14-16) (28879)

## THE AMERICAN COLLEGE OF HEALTH SCIENCES

**NURSES' TRAINING FOR FOREIGN EMPLOYMENT**

JOB OPPORTUNITIES FOR BOTH QUALIFIED MALE AND FEMALE NURSES IN MANY FOREIGN COUNTRIES ON COMPLETION OF TRAINING.

PLEASE MEET THE OFFICIALS FROM ACHS AT THE SEMINAR TO BE HELD AT JAFFNA *YMCA HALL ON 13th JULY 2003 FROM 10.00 AM TO 12.00 NOON*. AND GET FIRST HAND INFORMATION FOR THE COURSES.

(20172) (30-14-16-32)

உ

காரைநகர் மடத்துக்கரை
### ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

நாளை (13.07.2003) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அம்பாளுக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

-பிரம்மஸ்ரீ சோ.குகனேசசர்மா
ஆதீன குருவும் தர்மகர்த்தாவும்.

(20174) (30-14-16-32)

## யசுர்வேத உபாகர்மம்

ஆனி 28ஆம் நாள் 13.07.2003 ஞாயிற்றுக்கிழமை

ஆபஸ்தம்பீய சூத்திரத்தில் சொல்லப்பட்ட ஆதாரங்களைக்கொண்டும் காஞ்சி ஸ்ரீ மடத்தின் வழிநடத்தலின் படியும் யசுர் வேத உபாகர்மம் ஆனி 28ஆம் நாள் 13.07.2003 ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்வதாக பெரியோர்களால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்தினத்தில் யசுர்வேதிகள் யாவரும் உபாகர்மம் செய்து கொள்ளும் வண்ணம் வேண்டப்படுகின்றீர்கள். வழமையான பல இடங்களிலும் இந்த ஒழுங்கு நடைபெறும். சிவன் கோவிலில் காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

*சிவன் கோவில்,*
*நல்லூர்.*

(C28920) (30-14-16-32)

செயலர்,
நியந்திரி.

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆருயிர் நண்பன் ப.பத்மரூபன் அவர்களின் அன்புத் தந்தையாரான, உசனைப் பிறப்பிடமாகவும் பளையை வசிப்பிடமாகவும் கொண்ட

### சிவகுரு பரஞ்சோதி

(ஓய்வுபெற்ற ஆசிரியர்,யா/ மிருசுவில் வடக்கு அ.த.க.பாடசாலை)

அவர்கள் லண்டனில் 10.07.2003 அன்று காலமாகியதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

*இராமலிங்கம் றோட்,*
*முடமாவடி.*

(20173) (30-14-16-32)

பூங்கனிச்சோலை
நண்பர்கள்.

## மரண அறிவித்தல்

### கந்தையா கணபதிப்பிள்ளை

'ஸ்ரீகந்தகிரி', ஆடியபாத வீதி, நல்லூரைச் சேர்ந்த பிரபல தொழிலதிபர் க.க.கணபதிப்பிள்ளை 2003.07.09ஆம் திகதியன்று சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்லம்மா வாத்தியார் (முன்னாள் காசிப்பிள்ளை வித்தியாலய அதிபர்) அவர்களின் அன்புச் சகோதரரும் கனகசபை, கனகரட்னம், காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் செல்வராசா (லண்டன்), சுவர்ணேஸ்வரி (லண்டன்), ஜெகநாதன் (அமெரிக்கா), லோகேஸ்வரி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சந்தானலட்சுமி, தவமணி, அமுதராணி, கனகசிங்கம், கிரிஜா, ஸ்ரீபதி ஆகியோரின் அன்பு மாமனாரும் கேசவன், ஸ்ரீராம், தனுசியா, மஞ்சுளா, பிரேமலதா, கோபிதன், அஞ்சலா, சாமளா, டாக்டர் சதீசன், ஊலினி, சுசீலா, ஜெயர்கன், கபிலன் ஆகியோரின் பாசமிகு பேரனும் கம்சத்வனியின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (2003.07.13) ஞாயிற்றுக்கிழமை இல. 14, இராச வீதி, நல்லூரில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 10.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

*14, இராச வீதி, நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*
*T.P.NO:0777-293504*

தகவல்:
க.க.கனகரட்னம் (மகன்)
மற்றும் மக்கள், மருமக்கள்.

(20179) (30-14-1632)

## சைவநெறித்தேர்வு பட்டமளிப்புவிழா

யாழ்ப்பாணம்,ஜூலை12

யாழ்.சைவபரிபாலன சபையினரால் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட சைவ நெறித் தேர்வு, சைவசித்தாந்த பண்டிதர் பட்டப்பரீட்சைகளில் சித்தி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழாவும், பட்டமளிப்புவிழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

சைவபரிபாலன சபையின் தலைவர் இ.மகேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். நல்லை ஆதீன முதல்வர் அருளுரையையும், யாழ்.இந்துக்கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் க.சிவராமலிங்கம் 'எங்கேபோகிறோம்' என்ற தலைப்பில் விரிவுரையும் நிகழ்த்துவர். (எ)

## சைக்கிள் திருட்டு

வலி.வடக்கு,ஜூலை12

ஆங்கில தினப்போட்டியில் கலந்துகொள்ளச்சென்ற இடம்பெயர்ந்த மாணவியின் சைக்கிள் திருடிச்செல்லப்பட்டுள்ளது.

சாவகச்சேரியில் இருந்து இடம்பெயர்ந்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கல்வி கற்கும் மாணவியின் சைக்கிளே மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் வைத்து களவாடப்பட்டுள்ளது. (ஒ-86)

## சிரேஷ்ட பணியாளர் கௌரவிப்பு

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தில் 25வருட கால சேவையைப் பூர்த்திசெய்துள்ள சங்கப்பணியாளர்களைப் பாராட்டிக் கௌரவிப்பதென்று சங்க நிர்வாகம் தீர்மானித்துள்ளது. சங்க நிர்வாகம் விரைவில் நடத்தவுள்ள கூட்டுறவாளர் தினவிழாவில் இவர்களுக்கு தங்கப்பதக்கம் அணிவித்து பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளதாக சங்கப் பொதுமுகாமையாளர் சு.வைரவநாதன் தெரிவித்தார். (ஒ-135)

## திரைப்படக் கருத்தரங்கு

கொழும்புத்துறை,ஜூலை12

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகின் மாதாந்த திரைப்படக்கருத்தரங்கு இன்று பிற்பகல் 4 மணிக்கு யாழ்ஜும் ஆ பள்ளிவாசல் ஒழுங்கையில் உள்ளசிற்றி ஹோலில் நடைபெறவுள்ளது.

எழுத்தாளர் அ.ஜேசுராசா தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் 'தமிழ்த்திரைப்படங்களில் நடிப்பு' என்னும் பொருளில் குழந்தை.ம.சண்முகலிங்கம் கருத்துரை வழங்கவுள்ளார். (ஒ-30)


**லிபேட்டி** அச்சுவேலி
புதிய வெளியீடு
முரளி, அப்பாஸ், தேவயானி, வையாபுரி, மணிவண்ணன் நடிப்பில்
**காதலுடன்** (ரீலஸ்)
தினசரி காட்சி நேரம் 3.00, 7.00 (பி.நே.)



**THE MUMMY**
(கெரில்லாப்படம்)
தினசரி காலை 11.00 மணிக்கு
(ரீலஸ்)
(C/28683) (31-12-17)

**லஷ்சுமி சினிமா**
இணுவில்
சரத்குமார், தேவயானி
ஆனந்தராஜ், மணிவண்ணன்
நடித்த (ரீலஸ்)
**சூரியவம்சம்**
காட்சி நேரம்: 11.00,3.00,7.00 (பி.நே.)
(C/28663) (30-14-16)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
விஜய்,மீராஜஸ்மின் நடித்த
**புதிய கீதை** (ரீலஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
**THE LORD OF THE RINGS**
தினசரி 8.45 இரவு
(C28685) (30-14-17)

**நாகம்ஸ்** சுன்னாகம்
இன்று முதல்
விக்ரம். பிரியங்கா. பிரகாஷ்ராஜ்
நடித்த
**காதல் சடுகுடு** (ரீலஸ்)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00 (பி.நே.)
வெள்ளி,சனி,ஞாயிறு விசேடகாட்சி 7.00 (பி.நே.)
(C28757) (30-14-16)

**ராஜா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தினவெளியீடு
மாதவன், ஜோதிகா
**பிரியமான தோழி.**
தினசரி: 10.30,2.30,6.30, 9.30 (ரீலஸ்)
(30-14-16)


## வாழ்த்துகின்றோம்

மக்கள் வங்கியில் 25 வருட காலம் அதி உன்னத சேவையை வழங்கியமைக்காக இன்று கிறான்ட் ஒறியன்ரல் ஹோட்டலில் **(Grand Oriental Hotel)**

மக்கள் வங்கியின் தலைவர் திரு.லால் நாணயக்கார அவர்களால் பாராட்டிக் கௌரவிக்கப்படும் எமது கிளையைச் சேர்ந்த
**திரு. இ. இராஜமனோகரன் (உதவி முகாமையாளர்)**
**செல்வி கு. சுப்பிரமணியம் (அந்தரங்கக்காரியதரிசி)**
ஆகியோரை மனமார வாழ்த்துவதோடு, இன்று கௌரவிக்கப்படும் எமது ஏனைய நண்பர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
மக்கள் வங்கி,
பிரதான வீதி-104,
யாழ்ப்பாணம்.

(20169) (30-14-16-32)

## மரண அறிவித்தல்கள்

### கதிரவேலு சர்வேஸ்வரன் (ராசம்)

தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு சர்வேஸ்வரன் (ராசம்) கடந்த (09.07.2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பத்மலீலாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கதிரவேலு - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் சொர்ணம்மாவின் மருமகனும் நகுலேஸ்வரனின் (ஸ்ரீ-கனடா) சகோதரனும் தர்ஷினா(கனடா), துஷாந்தி (கனடா), கஜேந்திரன் (கனடா), சுஜந்தன் ஆகியோரின் தந்தையும் பத்மநாதன் (கனடா), பத்மராணி (நீர்கொழும்பு), பத்மஜோதி (ஜேர்மனி), பத்மலோஜினி (ஜேர்மனி), பத்மரோகினி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் கிருபாகரன், சுரேஸ்குமார் ஆகியோரின் மாமனாரும் கிரிஷாந், கிரிஷோத் ஆகியோரின் பேரனும் பேரின்பநாயகம், சத்தியமூர்த்தி, சிவநாதன், தனிகாசேகரம் ஆகியோரின் சகலனுமார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.07.2003) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மானிப்பாய் வீதி,*
*தாவடி வடக்கு,*
*கொக்குவில்.*

(C/28924) (30-14-16-29)

தகவல்:
ச.பத்மலீலா (மனைவி),
பிள்ளைகள்.

### திருமதி காசிப்பிள்ளை செல்வநாயகி

மயிலிட்டி, கிராமசபை வீதியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம், பழைய பொலீஸ்நிலைய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காசிப்பிள்ளை செல்வநாயகி அவர்கள் நேற்று (11.07.2003) வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காசிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை மற்றும் தங்கப்பிள்ளை, சிவபாக்கியம், தம்பிராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெகதீஸ்வரி(இந்தியா), இராஜேஸ்வரி (வவுனியா), வசந்தராணி (சங்கானை அரசினர் வைத்தியசாலை), குமாரதாஸ் (சுவிஸ்), காலஞ்சென்ற சிவதாஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற தவபாலசிங்கம் (விலாசம்), இராசரத்தினம்( A.K.R), அம்பிகைபாலன், கமலாம்பிகை (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சிவசுதன் (பிரான்ஸ்), சிவதீபன், இராஜேஸ்வரன், சிவாஜினி (பிரான்ஸ்), ராகுலன் (பிரான்ஸ்), கோகுலன், தமிழினி, வேணிலன், நிரோஜன், சாரங்கன், சுஜன், அபினஜன், அதியன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.07.2003) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் (பழையநேரம்) அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பழைய பொலீஸ் நிலைய வீதி,*
*சுன்னாகம்.*

(20168) (30-14-16-29)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி இராணி கிறிஸ்ரி

நாயன்மார்கட்டைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராணி கிறிஸ்ரி 07.07.2003 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் இமானுவல் கிறிஸ்ரியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் இலக்ஷ்மிப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற இமானுவல் மற்றும் மாகிறற் (LONDON) தம்பதியினர் பாசமிகு மருமகளும் மிதிலன், பவித்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் விமலாதேவி, நவரட்ணம், சந்திராதேவி, இந்திராதேவி (BELGIEM), துரைசிங்கம், தனபாலசிங்கம், (DUBAI) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராஜேந்திரராவ், பிரிட்டா, செல்வராஜா, சிவப்பிரகாசம் ( BELGIEM ), யோகாதேவி, மஞ்சுளா (DUBAI), மொனிக்கா, ஜேசுதாசன் (GENEVA), ஸ்ரெலா (LONDON) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.07.2003 திங்கட்கிழமை MANOR PARK, WHITTA ROAD, LONDON E6 இல் உள்ள மண்டபத்தில் நடைபெற்று, பூதவுடல் லண்டன் மாநகரில் உள்ள மயானத்தில் தகனஞ்செய்யப்படும் என்பதை சகலருக்கும் அறியத்தருகிறோம்.

18, BRISTOL ROAD,
FOREST GATE,
LONDON - E7
8HF- UK
T.P. 00442085527949

(20166) (30-14-16-29)

தகவல்:
திருமதி
இ.விமலாதேவி(அக்கா)
*23,வெயிலுகந்த பிள்ளையார் ஒழுங்கை,*
*செம்மணி வீதி, நல்லூர்.*
T.P 222-3713

### அகத்தீன் ஆசீர்வாதம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர், இளவாலை மெய்கண்டான் ம.வி.)

சென்.ஜேம்ஸ் இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட அகத்தீன் ஆசீர்வாதம் நேற்று (11.07.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அவாளப்பிள்ளையின் அன்புக் கணவரும் லூட் கமிலஸ் (படையாளுநர், கொழும்பு), லூட் அவ்பின் (சென்.அன்ரனீஸ், கொழும்பு), சான் பெனற் (தொழில்நுட்பக்கல்லூரி-மட்டக்களப்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மாலினியின் மாமனாரும் கிளேறியஸ், மல்சிஜோதிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது பூதவுடல் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புனித யாகப்பர் சேமக்காலையில் நல்லடக்கம்செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

*சென்.ஜேம்ஸ் லேன்,*
*இளவாலை.*

(20170) (29-14-16)

தகவல்:
-குடும்பத்தினர்

## ரத்வத்தையும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யோர் ஏனைய நீதியரசர்களாவர்.

தங்களுக்கு பிணை வழங்க மூன்று நீதிபதிகள் கொண்ட மேல் நீதிமன்றம் மறுப்புத் தெரிவித்திருந்ததை எதிர்த்தே எதிரிகள் உயர் நீதிமன்றத்திடம மனு செய்திருந்தனர்.

உடதலவின்ன படுகொலைகள் வழக்கை ட்ரயல் அட் பார் முறையில விசாரணை செய்துவரும் மேல் நீதிமன்றம், எதிரிகளின் பிணை மனுக்களை மூன்று தடவைகள் நிராகரித்திருந்தது.

கடந்த ஜனவரி 23 ஆம் திகதி வழக்கு விசாரணை ஆரம்பமானதை அடுத்து மேல் நீதிமன்றம் எதிரிகள் அனைவரையும் விளக்கமறியலில் வைத்தது.

எதிரிகள் 15 பேரையும் கடந்த வருடம் நவம்பர் மாதம் 15 ஆம் திகதி பிணையில் செல்வதற்கு ட்ரயல் அட் பார் நீதிபதிகள் வழங்கிய அனுமதியின் அடிப்படையிலேயே அவர்களைப் பிணையில் செல்ல உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

(ஐ)

## உயர் பதவிகளு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்திக்குறிப்பில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத காரணத்தால் நீண்டகாலமாக உயர் பதவிகள் வெற்றிடமாக இருந்து வருகின்றன. இதனால் பதவிக்கு ஆள்களை நியமிப்பது தொடர்பான நடைமுறை புதுப்பிக்கப்படவேண்டும். என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசமைப்பு மன்றத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான யோசப் மைக்கல் பெரேராவிற்கு இது தொடர்பாக ஜனாதிபதி கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

லஞ்ச ஊழல்களை விசாரணை செய்யும் ஆணைக்குழு இன்னமும் சட்டபூர்வமாக அமைக்கப்படவில்லை. பி.என்.அபயவீரவின் மரணம் காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்துக்கு தகுந்த ஒருவரை தெரிவுசெய்வதற்கு மூன்று பேரின் விண்ணப்பங்களைக் கோருமாறு ஜனாதிபதி கேட்டுள்ளார். ஆனால், இதுவரை எதுவித பதிலும் கிடைக்கவில்லை - இவ்வாறு ஜனாதிபதி செயலகம் விடுத்த ஊடக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விபத்துக்குள்ளான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்திருக்கின்றனர்.

இந்த விபத்துத் தொடர்பாக விரிவான விசாரணைகள் நடைபெறுகின்றன. விமானம் தரையிறங்கிய சமயம விபத்து நேர்ந்தது. விபத்து ஏற்படுவதற்கு முன்பாக விமானத்தின் ஒரு பக்க சிறகு சேதமடைந்திருந்தது எனவும் -

விமானத்தின் இயந்திரம் திடீரென்று நின்றுபோனதாகவும் - விசேட புலன் விசாரணைக் குழுவினர் ஊர்ஜிதம் செய்து அறிக்கை வெளியிட்டுள்ளனா. விமானப் படைத் தளபதியிடம் இந்த அறிக்கை கையளிக்கப்பட்டிருக்கிறது.

(ஐ-9)

## நயினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உற்சவம் நடைபெறும்.

பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் இன்றைய தேர்த்திருவிழாவில் அலைமோதுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் நேற்றே நயினாதீவு போய்ச் சேர்ந்திருக்கின்றனர்.

இரதோற்சவம் காண்பதற்காக தென்னிலங்கையிலிருந்தும் பெரும் எண்ணிக்கையில் யாத்திரிகர்கள் வந்து நயினாதீவில் கூடியிருக்கின்றனர்.

பக்தர்களின் வசதிகருதி குறிகாட்டுவான் மற்றும் கரம்பொன் கண்ணகை அம்மன் ஆகிய இறங்குதுறைகளில் இருந்து விசேட படகுச் சேவைகள் நடத்தப்படுகின்றன. யாழ்நகரிலிருந்து விசேட பஸ் சேவைகளும் நடத்தப்படுகின்றன.

ஆலயச் சூழலில் ஒழுங்கு பேணும் பணியில் பெரும் எண்ணிக்கையான தொண்டர்கள் ஈடுபட்டுள்ளனர். ஆலயத்துக்கு வருவோர் தங்க நகைகள் மற்றும் பெறுமதியான உடைமைகள குறித்து விழிப்பாக இருக்குமாறு கேடகப்பட்டுள்ளனர்.

(ஐ-10-17)

## உயர் பாதுகா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட இராணுவத்தளபதி பிரிகேடியர் கே.எஸ்.பெர்னாண்டோ, மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவண. இராயப்பு யோசப் ஆண்டகை, சேவியர் குருஸ், மன்னார் வாழ்வோதய இயக்குநர், மன்னார் மாவட்ட அரச அதிபரின் பிரதிநிதி மற்றும் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

(ஐ)

# புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் அதனைப் பார்த்துக்கொண்டிருந்தவேளை சுமார் இருபதுக்கும் மேற்பட்ட கடற்படையினர் திடீரென அவ்விடத்துக்கு வந்து படக்காட்சியை நிறுத்துமாறு கோரினர் என்று கூறப்படுகிறது.

அங்கு கூடிநின்றோர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால், அங்கு வாக்குவாதம் ஏற்பட்டது. இரு தரப்பினருக்கும் இடையே முறுகல் தோன்றி மோதல்நிலை ஏற்பட்டது. வீடியோ சாதனத்தைப் பலவந்தமாக அப்புறப்படுத்த கடற்படையினர் முயற்சித்தபோது அதற்கு எதிர்ப்புக் காட்டிய பொதுமக்கள் கடற்படையினரால் தாக்கப்பட்டனர் என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சம்பவத்தில் சிறுவர்கள் உட்பட பலர் காயங்களுக்கு இலக்காகினர் என்றும் கூறப்பட்டது.

விடுதலைப் புலிகளின் அரசியல் பணிக் குழுவைச் சேர்ந்த போராளிகள் உட்பட ஆதரவாளர்கள் சுமார் இருபது பேரை கடற்படையினர் சுற்றிவளைத்து தடுத்து வைத்தனர் என்றும் -

அதனால், அப்பகுதியில் சிறிது நேரம் பெரும் பதற்றம் ஏற்பட்டதாகவும் -

தகவல்கள் தெரிவித்தன.

எத்தனை போராளிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் என்ற விவரம் உடனடியாகத் தெரியவரவில்லை.

கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்தோர் பின்னர் அங்கிருந்து அருகில் உள்ள கடற்படை முகாமுக்கு கொண்டுசெல்லப்பட்டனர் என்று ஒரு தகவல் தெரிவித்தது. எனினும், புலிகளின் அரசியல் துறைப் பணிமனை இதனை ஊர்ஜிதம் செய்யவில்லை.

தொலைத்தொடர்பு வசதிகள் அரிதாக இருப்பதால் இச்சம்பவம் தொடர்பான விவரமான தகவல்களை உடனடியாகப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்று அரசியல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

தமது உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் தடுத்துவைக்கப்பட்டிருப்பது குறித்து புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறையினர் நேற்றிரவு கண்காணிப்புக்குழுவிடம் முறையிட்டனர்.

அரசியல் பணிக்குழுவினரின் வீடியோ சாதனங்கள் சேதப்படுத்தப்பட்டது குறித்தும் புலிகள் கடுமையான ஆட்சேபத்தைத் தெரிவித்திருக்கின்றனர்.

இதற்கிடையில் -

### சயனைட் அருந்த முயற்சி

கடற்படையினரால் தடுத்துவைக்கப்பட்டிருந்தவர்களில் போராளிகள் மூவர் சயனைட் அருந்தப் போவதாகத் தெரிவித்ததையடுத்து அங்கு நிலைமை ஆபத்தான கட்டத்தை அடைந்தது என்று நள்ளிரவு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

போராளிகள் சயனைட் அருந்தப் போகின்றனர் என்று தகவல் கிடைத்ததை அடுத்து புலிகளின் யாழ்மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் செம்மணன் சம்பவ இடத்துக்கு விரைந்தார். கடற்படையினருடன் தொடர்புகொண்டு போராளிகளை விடுவிக்குமாறு வற்புறுத்தினார். நீண்ட நேரமாக அவர்களைத் தடுத்துவைத்திருந்த கடற்படையினர் பின்னர் நேற்று நள்ளிரவுவாக்கில் மூவரையும் விடுவித்தனர் என்று பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

(ஐ)

## உத்தேச வரைவு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு யோசனையை புலிகளிடம் கையளிப்பதாயின் முதலில் கண்டிப்பாக அதனை ஜனாதிபதியிடமும் அமைச்சரவையிடமும் வழங்கவேண்டும் - என்றும் அவர் தெரிவித்தார்.

(ஐ-9)

## கண்காணிப்புக்குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை சந்தித்துப் பேசுவதற்காக அவா நேற்று கிளிநொச்சி வரவிருந்தார்.

குரங்குபாஞ்சானில் பயிற்சி முகாம அமைந்துள்ள பகுதிக்கு நேரடியாகச் சென்று நிலைமையை ஆராய்ந்த பிறகு தமிழ்ச்செல்வனுடன் பேச்சு நடத்துவதற்காகவே டெலிவ்சன் தனது கிளிநொச்சி விஜயத்தை ஒத்தி வைத்தார் என தகவலறிந்த வட்டாரங்கள தெரிவித்தன.

திங்கட்கிழமை கிளிநொச்சிக்கு வரும் டெலிவசன் இரு தினங்கள் கிளிநொச்சியில் தங்கியிருந்து முல்லைத்தீவுக்கும் சென்று புலிகளின் போக்குவரத்து மற்றும் பயிற்சிகள் தொடர்பாகவும் ஆராய்வார் என்று தெரிகிறது.

இந்தத் தடவை தமிழ்ச்செல்வனுடன் இடம் பெறும் சந்திப்பில் விடுதலைப் புலிகள் வசம் உள்ள கடற்படையினரை விடுவித்தால் கடற்போக்கு வரத்துக்கு புதிய உடன்படிக்கை ஏற்படுத்தல் உட்பட பல விடயங்கள் குறித்து டெலிவ்சன் கலந்துரையாடுவார்.

(ஐ-3)

## புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேலுப்பிள்ளை பரணீதரன் (வயது 18) என்ற புலிகளின் ஆதரவாளரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

மட்டக்களப்பு விபுலானந்த வீதி வழியே நண்பர் ஒருவருடன் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போதே இவர் சுட்டுக் கொல்லப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது

## ஐக்கிய தேசிய.....


(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தின் விருது வழங்கும் வைபவத்தில் பேசியபோது அமைச்சர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

அமைச்சர் பதவியிலிருந்து இராஜினாமா செய்யும் நோக்கத்தை பிரதமர் தலையீட்டதன் பேரில் தாம் மாற்றிக்கொண்டிருப்பதாக அவர் அங்கு தெரிவித்தார். (மற்றொரு செய்தி 2 ஆம் பக்கத்தில்)

(ஐ-9)





**இந்திய பரம்பரை ஜோதிடர்**

**அருள்வாக்கு அம்பிகா அம்மா**

மீண்டும் யாழ்.புண்ணிய பூமிக்கு வருகை.

கைரேகை. ஜாதகம் பார்க்கப்படும்.

ஒவ்வொரு நாளும் சாத்திரம் சொல்லப்படும்

உங்களுக்கு எந்தப் பிரச்சினைகள் ஆனாலும் கவலை வேண்டாம்.

உடனே அம்மாவைச் சந்தியுங்கள்; நன்மை அடையுங்கள்.

அம்மாவைச் சந்திக்கும் இடம்:-

அருள்வாக்கு அம்பிகா அம்மா

மடோனா லொட்ஜ்,

121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஸ்ரீமுருகன் ஜுவலர்ஸ் / நியூ லிங்கம் கூல்பார் அருகில்.

(c/28915)(30-14-17)

இன்றைய எமது புதிய வெளியீடு

மாதவன், ஜோதிகா நடித்த

**ப்ரியமான தோழி**

திரையரங்குகளுக்கு முன்னுரிமை

விஷ்ணு வீடியோ (கோண்டாவில்)

சோலை வீடியோ விஷன் (நெல்லியடி)

(C28927) (32)

சிவமயம்

**பூப்புனித நீராட்டு விழா அழைப்பு**

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் ஆனி மாதம் 29ஆம் நாள் (13.07.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 10.00 மணிவரையுள்ள அனுஷலக்கினமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

எமது புத்திரி திருவளர் செல்வி

**கம்ஷனா**

அவர்களுக்கு

இறைவன் திருவருள் துணைகொண்டு நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலாமண்டபத்தில் பூப்புனித நீராட்டு விழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து செல்வியை ஆசீர்வதித்து, வைபவத்தினை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

'கனகா பத்திரிகை விற்பனையகம்'

இல.06, பலாலி வீதி, திருநெல்வேலி.

குறிப்பு : தவறுதலாக அழைப்பிதழ் கிடைக்காதிருந்தால் தயவுசெய்து இந்த அழைப்பை நேர்முக அழைப்பாக ஏற்று வருகைதருமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

திருமதி நவரத்தினம்

அண்ணன்மார் : வினோதன் (லண்டன்), வசந்தன்

இல. 60, பலாலி வீதி, திருநெல்வேலி.

(18615)(30-14-17)

தென்மராட்சி மாணவர்களுக்கு ஓர் அறிமுகம்

**NATHAN ACADAMY**

**நாதன் அக்கடமி**

மகிளடி வளவு, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

★ தரம் 6 முதல் 11 வரையான வகுப்புகள்

★ முதலில் இணையும் 100 மாணவர்களுக்கான இலவச கணனி வகுப்பு.

அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஆரம்பம்: 13-07-2003

ஞாயிறு பி.ப. 3.00 மணி

மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-நிர்வாகி.

(20048) (30-14-17-32)


## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

### வருடாந்தப் பொதுக்கூட்ட அறிவித்தல்

கடந்த 25.05.2003 அன்று நடைபெற்ற சங்க செயற்குழுவின் தீர்மானத்திற்கு அமைய சங்கத்தின வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 31.08.2003 (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணிக்கு கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

சங்க அங்கத்தவர்கள் அனைவருக்கும் மேலதிகமாக (நிகழ்ச்சிநிரல் மற்றும் விடயங்கள் அடங்கிய) வருடாந்தப் பொதுக்கூட்ட அறிவித்தல் தனித்தனியாக அனுப்பிவைக்கப்படும். தங்களுடைய பதிவு விலாசம் மாறியுள்ளவர்கள் அது பற்றிய விவரத்தை நேரத்தோடு எமக்கும் தெரியப்படுத்துமாறு வேண்டுகிறோம். கூட்ட அறிவித்தல் தவறாது உறுப்பினர்களுக்குக் கிடைப்பதை உறுதிப்படுத்த அது உதவும்.

வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் கடைசி செயற்குழுக் கூட்டத்தில் அதைப் பரிசீலிப்பதற்கு வசதியாக - 01.08.2003 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக - அதனை அனுப்பிவைக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

நன்றி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
11-07-2003

செயலாளர்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.07.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.